அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி-3 21-6-'63 வெள்ளி கதிர்-15

10,000 பேர் பரிதவித்துச் சாகிருர்கள்!

பதினுயிரம் பேர் சாகிருர்கள்! நாளொன்றுக்குப் பதினுயிரம் பேர் உலக முழுமையும் பிணமாகிருர்கள்! வெட்டிக்கொண்டோ, விரோதத்தால் அடித்துக்கொண்டு மாண்டோ அல்ல, பசியால்! ஆம், பட்டினிக் கொடுமையால், பரிதவித்துச் சாவோர் நாளொன்றுக்குப் பத்தாயிரம் என்று பட்டியல் வருகிறது ஐக்கிய நாடுகள் சபையின் கணக்கு!!

குதித்தோடும் அருவி, குயில் கூவும் தோட்டம், வளம் கொஞ்சும் வயல்கள், வான் முட்டும் மலைகள், மாநதிகள், மண்வெளிப் பரப்பு, தண்புனல் எல்லாம் நிரம்பிய மண் மாதாவின் மடியில் தவழும் மக்களில் பதினுயிரம் பேர் சாப்பிட வழியில்லாமல், தவித்துத் தத்தளித்து உயிர் விடுகிருர்களாம்!

சரித்திரமே காணுத கொடுமை—இதனை எப்படித் தவிர்க்கப் போகிறோம்—என்ன வழி செய்வது—என்று எல்லா நாடுகளும் இன்று கவலை கொள்கின்றன. அதிலும், பாலும் தேனும் ஓடும் என்று பறைசாற்றப்பட்ட இந்தியாவில்,

"அடுத்து வரும் பத்தாண்டுகளில் மட்டும் போதிய உணவில்லாத காரணத்தால் 5 கோடி குழந்தைகள் சாவார்கள்" என்று சொல்கிறது, கணக்கு. ஐந்து கோடிக் குழந்தைகள்! தின்ன எதுவுமில்லாமல்! தாய் தந்தையரின் பட்டினி காரணமாக! அழகு இழந்து, வயிறு சூம்பி, கண்களை யிழந்து, கண்ணராவியாகச் சாவார்களாம்! 5 கோடிச் குழந்தைகள், ஐயகோ, என்ன பயங்கரம்!!

கடிகாரம் 'டிக்! டிக்!' என்று சப்தம் எழுப்புகிறதல்லவா? ஒரு டிக் சப்தத்துக்கு இடையில் உலகில் மூன்று புதிய வாய்கள் உற்பத்தியாகின்றனவாம்! மூன்று குழந்தைகள் பிறக்கின்றனவாம்! இந்த விகிதப்படி உற்பத்திப் பெருக்கம் அதிகரிக்குமானல், இன்னும் 17 ஆண்டுகளில், 40 கோடியாக அதிகரிக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதில் முக்கால்வாசி ஆசியாவிலும், லதீன் அமெரிக்காவிலும், ஆபிரிக்காவிலும்தான் இருக்குமாம்.

ஏழையும் சீமானும்

உலகத்தில் மக்கள் தொகை இப்படிப் பெருப்பது மட்டுமல்ல, இருப்போர். இல்லாதோர் என்கிற பேதமும் அந்தளவுக்கு விரிவாகும் என்று அஞ்சப்படுகிறது. உலகின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினர் வட அமெரிக்காவிலும், மேற்கு ஐரோப்பாவிலும் ஆஸ்திரேலியாவிலும் வாழ்கிருர்கள். இவர்கள் சுகவாசத்தில், மிதப்பார்கள். உதாரணமாக ஒரு அமெரிக்கன் ஒரு நாளைக்கு 4.75பவுண்டு உணவு உட் கொள்ளுகிருன்.

ஆனல் அதே சமயம் வசதியுள்ள ஒரு இந்தியன் ஒரு நாளைக்குச் சாப்பிடுவது எவ்வளவுதெரியுமா? 1.25 பவுண்டு தான்! சில நிபுணர்களின் கணக்குப்படி, அமெரிக்காவில் ஒரு நாளைக்குத் தின்று விட்டு வீசப்படும் சாப்பாட்டைக் கொண்டுசைனுவிலுள்ள 65 கோடி மக்களுக்குப் பல நாளைக்குச் சாப்பாடு போடலாமாம். ஒரு சாதாரண இந்தியத் தொழிலாளி சாப்பிடுவதைவிட அமெரிக்காவிலுள்ள ஒரு நாய் சத்தான அதிகமான உணவைத் தின்கிறது!!

அதோ ஒரு கிராமம்! குடிசைகள் பல! ஏரும் கலப்பையும்! எலும்பும் தோளான மாடுகள்! கோவணங்கட்டாத குழந்தைகள்! அடுப்பு! அதற்குள் காயவைத்த சாணி உருண்டை!!—

(2-ம் பக்கம் பார்க்க)

பொதுக்குழு காட்சிகள்!



புகைப்படங்கள்: சாமுவேல்

12 பக்கம்

16 காசு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுதான் இந்தியாவிலுள்ள சுமார் 5,58,000 கிராமங்களில் நாம் காணும் காட்சியாகும்! அந்த அடுப்பினருகில் தாய்! அத்தாயைச் சுற்றி சராசரீ ஆறு குழந்தைகள்! அந்த ஆறு குழந்தைகளுக்கும் அத்தாய்க்கும் ஒரே ஒருவன் சம்பாதித்துப் போடவேண்டும். அதுவும் அவனுல் முழுவயிற்றுக்கும் போட முடியாது. இதுதான் ஆசியாவிலும் ஆபிரிகாவிலும் உள்ள நிலைமையாகும்! ஆனுல் அமெரிக்காவில் ஒரு விவசாயி பாடுபட்டால் 26 பேருக்குச் சோறு போட முடியும்! அமெரிக்க விவசாயியின் நிலை விஞ்ஞானத்தாலும் வசதிகளாலும் உயர்ந்திருக்கிறது.

ஒரு சீனப் பழமொழியுண்டு, "ஒரு மனிதனிடம் ஒரு மீனைக் கொடு. அன்றைய பசி அவனுக்குத் தீரும். எப்படி மீன் பிடிக்கலாம் என்று அவனுக்குக் கற்றுக் கொடு. ஆயுள் பூராவும் அவன் பசி தீரும்", என்பதாக. இன்றைய தினம் உணவுப் பண்டங்களை உதவுவதற்குப் பதில், பற்றுக் குறை நாடுகளுக்கு உணவுற்பத்திக்கான வசதிகளைச் செய்து கொடுத்தால் சிக்கல் தீரும் என்பது பலருடைய கருத்தாகும்!!

இதே அடிப்படையில்தான் அமெரிக்க அரசு பல நாடுகளுக்கும் நிபுணர்களையும் விவசாயத் துறையினர்களையும் அனுப்புகிறது. அப்படிச் செய்கின்றவர்கள், அமெரிக்க முறைகளையல்ல, அந்தந்த நாடுகளுக்குள்ள சூழ்நிலைகளையொட்டிப் பலவித முறைகளைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். நேபாளத்தில் வாழ்வோருக்கு எப்படி பாலை அதிகமாகக் கறக்கலாம் என்று சொல்லித் தருகிறார்கள் தாய்லாந்து மக்களிடம் எப்படி பயிர் வளரும் போதே அதே வயல்களில் மீன்களையும் வளர்க்கலாம் என்று கற்றுத் தருகிறார்கள்! லிபியாவில் பழத் தோட்டத்தைக் கொள்ளையிடும் ஈக்களை விரட்ட உதவுகிறார்கள்! யுகோஸ்லோவேகியாவில் இத்தாலியச் சாகுபடியைச் சொல்லிக் கொடுக்கிறார்கள்!!

இதெல்லாம், சரி. இந்த ஊக்கத்தைப் பாராட்டுவோம். ஆனுல், காட்டுத் தீயை அணைக்கக் கருவேப்பிலை போதுமா? என்பதுதான் பிரச்சினையாகும் கடந்த உலகப் போருக்குப் பிறகு உலகத்தில் உணவு உற்பத்தி 25 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது என்பது உண்மையே; ஆனுல் அதைவிடப் பெரிய உண்மை மக்கள் பெருக்கம் 30 சதவிகிதம் அதிகரித்திருப்பதாகும். இதே சதவிகிதத்தில் போனுல் 1980-ல் உலகமெல்லாம் பஞ்சத்தால் அடிபடும் என்கிறார்கள், நிபுணர்கள்.

என்ன செய்யலாம்?

பயமும் திகைப்பும் உண்டானுலும், இதையெல்லாம் சமாளித்துவிடலாம் என்கிறார்கள் விஞ்ஞானிகள்! இன்னும் கழனிகளாக்க வேண்டிய பாகம் உலகத்தில் ஏராளமிருக்கிறது. அவைகளை விஞ்ஞான முறையில் மண்படுத்தி விவசாயம் செய்தால் பலனைப் பெருக்க முடியும் என்று நம்புகிறார்கள். உண்மை யென்று நாமும் நம்ப முடியும்! ஏனெனில் எரிமலைகள் அதிகமாகவும் விளை நிலங்கள் கொஞ்சமாகவும் கொண்டுள்ள ஜப்பான் ஏராளமாக உற்பத்தி செய்கிறது. தங்களுடைய திருத்தியமைக்கப்பட்ட சாகுபடி முறைகளால், மூன்று மடங்கு அதிகமாக விளைவிக்கிறது—ஆசியாவின் ஏனைய இடங்களை விட!! புதிதாக உருவான இஸ்ரேல் நாடு, உணவுற்பத்தியில் அற்புதமேசெய்திருக்கிறதெனலாம். பாலைவனங்கள் எல்லாம் பசுஞ் சோலைகளாக்கப்பட்டிருக்கின்றன, இங்கே!! பிரிட்டனில் 4 சதவிகிதம்தான் குடியானவர்கள். அது,உணவுக்குப் பிற நாடுகளை எதிர்பார்த்து

(11—ம் பக்கம் பார்க்க)

இந்தியின் அழகு!

இந்தி எப்படி பிறந்தது? இதோ அது பற்றி 1888-ல் வங்கத்திலிருந்த ஆசிய சங்கத்தின் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை:

"மராட்டிய மண்டலம் சிதறியதோடு, கிப்பாய்க் கலகமும் அடக்கப்பட்ட பிறகு உள்ளகாலத்தில்இந்துஸ்தானின் இலக்கிய வளம் எப்படியிருந்ததெனக் காண்போம். இந்தக் காலத்திற்முன் வட இந்தியாவில் அச்சகங்கள் உருவாயின. புது முறை பள்ளிகளும் அங்குமிங்கும் தலைகாட்டலாயின. இப்பொழுதுதான் ஐரோப்பியர்களால் 'இந்தி' என்று அழைக்கப்பட்ட ஒரு மொழி பிறந்தது. அது ஒரு காட்டு மொழியாகும். 1803-ல் கில்கிரைய்ட் என்பாரின் போதனைப்படி லல்லுஜிலால் பிரேம்சாகர் என்னும் நூலை எழுதலானுர். அந்நூலில் அக்பரின் ஆஸ்தான புலவர்கள் கையாண்ட உருது மொழி நடையும், முச்சந்திகளில் கூடும் சகல மக்களின் பேச்சு நடையும் கலந்து எழுத முயன்ருர். இந்நூலில் அரேபிய அல்லது பாரசீக மொழியில் வரும் பெயர்களையும் இந்திய மயமாக்கினுர். இதனுல் புதிய ஒரு கதம்பமாக இருந்தது அந்நூல்! இப்படி உருவானதுதான் இந்தி. இதை. ஐரோப்பியர்கள் இந்கி என்று அழைக்கலாயினர். படிப்படியாக இப்படியமைந்த நூல்கள் ஏற்படலாயின. யாவும் உரை நடைக் காப்பியங்களே ஒழிய இம்மொழியில் சிறந்த கவிதை நூல்களை ஆக்க முடியவில்லை. மிக மிகப் பெரியவர்களெல்லாம் கவிதைகள் புனைய முயன்றனர்; எனினும் இயலவில்லை, ஆகவே. இப்போதுள்ள இலக்கியம்—ஆங்காங்குள்ள மொழிகளில் எழுதப்படும் கவிதைகள்தான். பீகார், பாயஸ்வாரி, பிராஜ் முதலிய மொழிகளில் கவிதையிருக்கும். ஆனுல் உரை நடை நூல்களோ இந்தியிலிருக்கும். அதனுல் தான் அப்போதிருந்த இந்தி ஆதரவாளர்களால், எந்த மொழியினரையும் வலியுறுத்த முடியவில்லை. எந்தச் சிறப்பைக் காட்டி வலியுறுத்துவது?" என்று 1956 மே 5-ந் தேதிய இந்து இதழில் ஜார்ஜ் ஏ. கிரீயார்சன் என்பார் எழுதியுள்ளார். இந்த இந்தியைத்தான் பல்லாயிரம் ஆண்டுகளாக இயங்கி வரும மொழி வளம் கொண்ட நம்மீது சுமத்துகின்றனர்.

போர்ப் பரணி

இந்திக்கு தமிழ் நாட்டில் ஆதிக்கமாம்—நீங்கள்
எல்லாரும் வாருங்கள் நாட்டினரே!
செந்தமிழ்க்குத் தீமை வந்த பின்னும்—இந்தத்
தேகம் இருந்தொரு லாபமுண்டோ?

இப்புவி தோன்றியநாள் முதலாய்—எங்கள்
இன்பத் தமிழ்மொழி உண்டு கண்டீர்!
தப்பிப்பிழைத்தார் இங்கு வாழ்ந்ததில்லை—இந்தத்
தான்தோன்றிகட்கு என்னஆணவமோ?

எப்பக்கம் வந்துவிடும்—இந்தி
எத்தனை பட்டாளம் கூட்டிவரும்?
அற்பம் என்போம் இந்திதனை—அதன்
ஆதிக்கம் தன்னைப் புதைத்திடுவோம்!

எங்கள் உடல் பொருள் ஆவியெல்லாம்—எங்கள்
இன்பத் தமிழ் மொழிக்கே தருவோம்!
மங்கை ஒருத்தி தரும் சுகமும்—எங்கள்
மாத் தமிழ்க் கீடில்லை என்றுரைப்போம்!

சிங்கமென்றே இளங்காளைகளே!—மிகத்
தீவிரம் கொள்ளுவீர் நாட்டினிலே!
பங்கம் விளைத்திடில் தாய்மொழிக்கே—உடல்
பச்சை ரத்தம் பரிமாறிடுவோம்!

தூங்குதல் போன்றது சாக்காடு—பின்னர்,
தூங்கி விழிப்பது நம் பிறப்பு!
தீங்குள்ள இந்தியை நாம் எதிர்ப்போம்—உயிர்
தித்திப்பை எண்ணிடப் போவதில்லை!

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை —எமை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை!
ஏங்கவிட்டோம் தமிழ் தாய்தனையே—உயிர்
இவ்வுடலை விட்டு நீங்கும் வரை!

சட்ட மன்றத் தொகுதிக்குச் சட்டப்படி—

செலவு செய்ய வேண்டியது ரூ. 7500

பெற்றுக்கொண்டதோ ரூ. 10,000

★ என்கிறார் மந்திரி மாளவியா! ★

“நான்கு பிள்ளைகளுக்குத் தந்தை; மனைவியுடன் பெற்றோர் இருவர்; அவன் போலீஸ்காரன்; வாங்கும் ஊதியத்தில் குடும்பம் நடத்த முடியவில்லை, அவனால்; ஆகவே தன குடும்பத்தை காப்பாற்ற வேண்டி, ஏதோ மூன்று ரூபாய் லஞ்சம் வாங்கினான், மூன்று ரூபாய் இலஞ்சம் வாங்கிய குற்றத்திற்காக அவன் வேலையிலிருந்து விலக்கப்பட்டான்” நாள் தோறும் பத்திரிகைகளில் இதைப் படிக்கிறோம்!

ரயில்வேயில் பணிபுரிந்த கிளார்க் ஒருவன் காபி குடிப்பதற்கு எட்டு அணா வாங்கியதற்காக சஸ்பெண்ட் செய்யப்பட்டான்: என்ற செய்தியும்—மறுபுறத்தில் வேலை வாங்கித் தருகிறேன் என்று சிபாரிசு செய்ய கையூட்டு ரூ. 50 பெற்றதற்கு ஆறுமாத சிறை தண்டனை என்ற செய்தியையும் நாள் தவறாது பத்திரிகையில் படிக்கிறோம்.

“அகவிலை விஷம் போல் ஏறி விட்டது; தன் பிள்ளைகளைப் படிக்க வைக்க முடியவில்லை; சாவின் முனைக்குச் செல்லத் துடிக்கும் பெற்றோர்களுக்கு வாய்க்கு ருசியான பண்டங்கள் வாங்கித் தர முடியவில்லை” என்ற பரிதாப நிலையில் வாழ்ந்திடும் போலீஸ்காரன் மூன்று ரூபாய் வாங்கியது சட்டப்படி குற்றம் காங்கிரசாட்சியில்!

காபி குடிக்க எட்டு அணா வாங்கியது குற்றம் அகிம்சாவாதியின் ஆட்சியில்! இதைப் போன்று நாள் தவறாது சிறு சிறு இலஞ்சப் புகார்களுக்குத் தண்டனை அளித்தது என்பது சரியல்ல; வாழ்க்கையில் வெந்து மடிந்து கொண்டிருந்தவர்களை சாக்காட்டிற்கு அனுப்பினான் நீதிதேவன்!

நீதித்தேவனின் நேர்மையை நாம் சமீபத்திய செய்தி தாள்களில் படித்த நமக்கே வியப்பாகவும் இருந்தது. ஒரு நாளும் இருக்காது; பத்திரிகையாளர்களின் குழப்பம் இது என்று பலகாங்கிரஸ்தியாகிகள் பேசிக் கொண்டார்கள். ஆனால், “மத்திய மந்திரி மாளவியா 10 ஆயிரம் லஞ்சம் வாங்கினார் என்பது உண்மையா......என்று அறிய உயர் நீதி மன்ற நீதிபதி திரு எஸ். கே. தாஸ் விசாரணை செய்வார்! அந்தப் புகாரைப் பற்றிய நடவடிக்கை ரகசியமாக இருக்கும்” சொன்னதுயாரோ அல்ல; சாதாரண புதிய காங்கிரஸ்காரரல்ல; காந்தியின் வாரிசும் இந்நாளைய இந்தியாவின் தவப் புதல்வர் பண்டித நேருதான்! அவ்வாறு கூறியுள்ளார்!

பண்டிதரின் வேண்டுகோளின்படி உயர்நீதிமன்றநீதிபதி திரு. எஸ். கே, தாஸ்மாளவியா புகாரை விசாரணையும் செய்தார்! விசாரணையில்புலப்பட்ட உண்மைகளை இரகசிய அறிக்கையாக தலைமையமைச்சரிடம் தாக்கீதும் செய்தார்!!

மாளவியா பெரிய மந்திரி! திரு. சிராஜுதீன் கம்பெனியின் உரிமையாளர் பெரிய சீமான்! “ஆதாயம் இன்றிஆற்றைக் கட்டி இறைப்பார் யாருமில்லை; சிராஜுதீன் மட்டும் காங்கிரஸ்வளரபணம் கொடுத்தாரென்றால் காரணமில்லாமல் அல்ல; அதன் பலனாகஇவருக்கு பல துறைகளிலிருந்து பணம் வர வழி வகை செய்து கொடுப்பது காங்கிரஸ் ஆட்சி! வழி வகை செய்த காங்கிரஸ் கட்சியைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு”

ஒரிசாவின் முன்னாள் முதலமைச்சர் அரிகிருஷ்ண மேதாவுக்கு நன்கொடை வழங்கியிருக்கிறார் அவருக்குத் தனிப்பட்ட முறையில் அல்ல; 1957-ம் வருட தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதற்கு சிராஜுதீன் கொடுத்திருக்கிறார்!

தற்சமயம் ஒரிசாவின் முதலமைச்சராக இருக்கும் பிஜயோனந்பட்நாயக்கும் சிராஜுதீனிடம் பண உதவிப் பெற்றுள்ளார்!

சிராஜுதீன் காங்கிரசை வளர்க்க மட்டும் நிதி வழங்கவில்லை; தனக்கு பண வருவாய்க்குப் பக்க பலம் நிற்போர்—உதவி புரியும் அரசியல் வாதிகள்—அதிகாரிகள் அத்தனைப் பேருக்கும் அள்ளி அள்ளிக் கொடுத்திருக்கிறார் அச்சீமான்.

அவரைப் பிடித்த துரதிருஷ்டமோ! காங்கிரசைப் பிடித்த கஷ்டகாலமோ தெரியவில்லை. இந்த ஆண்டு காங்கிரசிலுள்ள பெரிய மனிதர்களும் திடீர் திடீரென்று இறந்து விடுகிறார்கள்! காங்கிரசை வளர்க்கும் ரூபாய் நோட்டுகளும் செல்லாக்காசாகிவிடுகிறது; அதைப் போல் சிராஜுதீன் கம்பெனியார் வருமானவரி—சுங்க வரி—விற்பனை வரிஆகியவைகளில் சிக்கிக் கொண்டார்கள். இந்த சிக்கலை தீர விசாரணை செய்த நேரத்தில்தான் பல முக்கிய காங்கிரஸ்காரர்களின் பெயரோடு மத்திய அமைச்சரவையில்—பண்டித நேருவின் வலது கையாக அமர்ந்திருந்த மந்திரி மாளவியாவும்இதில் தொடர்பு கொண்டிருப்பதாக தெரிய வந்தது!

சிராஜுதீன்என்றால்சாமான்யமானவரல்ல;

பல தொழில்களை நடத்துபவர்! பல ஆலைகளுக்கு சொந்தக்காரர்! மாட மாளிகையுண்டு; சுகபோக வாழ்வு டாட்டா பிர்லாவைப் போல; பல கோடிக்கு அதிபர்! ஆனால் இவற்றையெல்லாம் விட அவருக்கு முக்கிய தொழிலாக விளங்கியது சுரங்கத் தொழில்.

மத்திய அமைச்சரமையில் எண்ணெய்—சுரங்க வளத்தை பெருக்கும் அமைச்சராக இருப்பவர் மாளவியா!

அதே அமைச்சர் மாளவியா தான் சிராஜுதீன் கம்பெனியாரிடம் ரூ. 10 ஆயிரம் பெற்றுக்கொண்டு ரசீது கொடுத்திருக்கிறாராம்!

இதைக் கேள்விப்பட்டபழம் பெரும் காங்கிரஸ்கள் கண்ணீர் வடிக்கிறார்கள்.

சென்ற ஏப்ரல் மாதம் 2-ம் நாள் காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் தேர்தல் செலவுக்கு—பாஸ்தி எனும் தொகுதிக்காக சிராஜுதீன் கம்பெனி ரூ. 10 ஆயிரம் நன்கொடை வழங்கியுள்ளது” என்று மந்திரி மாளவியா பேசியுள்ளார்!

அதே மந்திரி மாளவியா காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் பேசுவதற்கு முன் தன் நண்பர் மட்டுமல்ல; பொறுப்பு வாய்ந்த அமைச்சராக இருப்பவரிடம் சிராஜுதீன் கம்பெனியாரின் தொகையை எனது நண்பர் ஒருவரின் திருமணத்திற்காக பெற்றுக் கொண்டேன் என்பதாக கூறியுள்ளார்”

மந்திரி மாளவியா குழப்புவது மட்டுமல்ல; உத்திர பிரதேசத்திலுள்ள பாஸ்தி தொகுதிக்கு ரூ. 10 ஆயிரம் தேர்தல் செலவுக்கு வாங்கினேன் என்கிறார்;

சட்ட மன்ற தொகுதிக்கு போட்டியிடும் வேட்பாளர் செலவு செய்ய வேண்டிய தொகை சட்டப்படி ரூ. 7,500. ஆனால் சட்டம் படித்த அமைச்சர் தேர்தல் செலவுக்கு 10 ஆயிரம் வாங்கியுள்ளதாக கூறியுள்ளார்!

அப்படியே இருந்தாலும் இரசீதைபாஸ்திதொகுதிசட்ட மன்ற வேட்பாளர் கொடுக்க வேண்டும்! அவர் கொடுக்க

(10-ம் பக்கம்பார்க்க)

நேருவின் கொள்கை தோல்வி!

ராஜினாமா செய்யாதது ஏன்?

மந்திரிகள் தேர்தல் வேலை செய்யலாமா?

★ கி. மனோகரன் எம். ஏ., எம். பி. ★

சென்ற கிழமை பாராளும் பண்டித நேரு அவர்கள் சென்னை வந்த பொழுது பிரமாண்டமான வரவேற்பு வைபவம் நடந்த பொழுது, அதில் காமராசர் தன்னுடைய நூதன புத்தியின் சபலத்தால் நேருவிடம் "இவர்தான் நடேச முதலியார்; அண்ணாத்துரையை தோற்கடித்த சீராளன், மாவீரன்" என்று அறிமுகப்படுத்தினாராம்! பண்டிதர் நேரு அவர்களும் நடேச முதலியாரின் முதுகில் தட்டிக் கொடுத்து 'அப்படியா' என்று சிரித்தாராம்!

இதில்கூட காமராசர் தன்னுடைய பஞ்சப் புத்திக்கு இரையாகிவிட்டார்! முதலமைச்சராக இருப்பவர் இதைப் போன்ற பஞ்சப் புத்திக்கும், அற்ப ஆசைகளுக்கும் ஆளாகாது "இவர் காங்கிரசுக்காரர்; நம் கட்சிக்காக அயராது உழைக்கும் நல்ல தொண்டர் என்று கூறியிருப்பாரேயானால் அது நாகரீகமானது!

பண்டித நேரு சிறிது கற்பனை செய்து பார்ப்பாரேயானால் என்ன நினைப்பார்!

இந்த ஆளை ஒரு கருவியாகப் பயன் படுத்திதான் ஒரு அறிவாளியைத்தோற்கடித்தாயா? நீ இப்படித்தான் அறிவாளியெல்லாம் தோற்கடித்து உன் செல்வாக்கை வளர்த்துக் கொள்கிறாயா! நீ வளர்வது மட்டுமல்லாமல்; சட்ட சபையில் தோற்கடித்து நீ நேராக ராஜ்யசபைக்கல்லவா அனுப்பி எனக்கு தலைவேதனையைக் கொடுத்து விட்டாயே! என்று அவருடைய கற்பனை எண்ணங்கள் சுழலாமலா இருக்கும்!

காமராசர் இதைப்போன்ற அற்ப சந்தோஷத்துக்கு ஆசைப்பட்டு சிறுமைத்தனமாகப் பேசுவது ஆபத்தானது மட்டுமல்ல; தீராத களங்கத்தை அரசியல் வரலாற்றில் அவர் பெற நேரிடும்! இதைப் போல் பேசியே நீண்டநாள் அரசியலில் செல்வாக்கை நிலை நாட்ட நினைப்பது ஆபத்தல்லவா?

மேடைதோறும் பேசுகிறார் காமராசர்! இந்தியைத் திணித்தால் நான் சும்மா இருப்பேனா? கேட்கிறார் அவர்; கேட்குமளவுக்குத்தான் இருக்கிறார்; எதையும் புரிந்து கொள்ளும் அளவுக்கு அவர் இல்லை!

இந்தியை திட்டமிட்டு நம் மீது திணிக்கிறார்கள்; இந்தியைத் திணிப்பது நமக்குஆபத்தானது என்பதை மறவாதீர்கள். தமிழகத்தில் தாழ்வாரம் வரை வரும் இந்தி தெருவீதிகளிலே நடமாடும் இந்தி கட்டிலறை வரை வரும்! அப்படி வந்தால் தமிழ் மொழிஅழியும் தமிழ் மொழி பெற்றிருக்கக் கூடிய இலக்கணம் அழியும்; இலக்கியம் அழியும்! காமராசருக்கு தமிழ்மொழிதான் தெரியுமே தவிர தமிழ் இலக்கணம் தெரியாது; தமிழில் இருக்கும் இலக்கியத்தை அவர் அறிய மாட்டார்! இந்தி வந்தால் நாலாந்தரமொழியாகும்தமிழ்

இந்தி மொழிக்கு வெண் சாமரம் வீசி தாசி வேலை செய்யும் வேலைக்கு நம் மொழி இருக்க வேண்டுமா? அரியாசனத்தில் அமர வேண்டிய மொழியை சேடி வேலைக்கு அமர்த்திவிட்டு சேடி வேலைக்கு லாயகற்ற இந்தி மொழிக்கு முதலிடம் கொடுத்தால் நம்மின் மொழி தன்னளவிலே குன்றி குறையும்!

அறிவாளிகள எப்படி காமராசர் முதலமைச்சராக இருப்பதைப் பார்த்து முதலமைச்சர் பதவிக்கு எந்தவித லாயக்குமின்றி முதலமைச்சராக இருக்கிறாரே என்று தன்னளவில் குன்றுகிறார்களோ கல்லூரியில் படித்து பி. ஏ. ஆனர்ஸ் பட்டம் பெற்ற சர்க்கிள் இன்ஸ்பெக்டர் எப்படி காமராசருக்கு வெண் சாமரம் வீசி தன்னளவில் "ஏறுகிறானே ஏறுகிறானே ஏதுமறியாதவன் ஏறுகிறானே ஆட்சியில் என்று வருத்தப்படுவது போல்தான் இந்தி சேவடிக்கு நம்முடைய தாய்மொழி தமிழ் சேடி வேலை செய்ய வேண்டும்!

இது காமராசருக்கு உண்மையில் புரியாது. இல்லை புரிந்துதான் இப்படி மக்களை ஏமாற்றுகிறாரா? என்றால் இல்லை; இப்போது எங்கே என்றால் திருவண்ணாமலையில் தீபம் காண்கிறார்!

மந்திரிகள் தேர்தல் பிரச்சாரம் செய்வது சரிதானா—செய்யலாமா என்றால் நாங்கள் மந்திரிகள் என்ற கோதாவில் செல்லவில்லை; காங்கிரஸ் தொண்டன், ஊழியன் என்ற முறையில் செல்லுகிறோம் என்று சொல்லலாம்.

அதையும்கொஞ்சம் கற்பனை செய்து பார்த்தால்தான் தெரியும்;பண்டிதர்நேரு அம்ரோகா தொகுதிக்கு தேர்தல் பிரச்சாரம் செய்ய சென்றார்! நேரு என்றால் காங்கிரஸ் ஊழியன் தொண்டன் என்று யாராவது சொல்வார்களா?இந்தியாவின் முதலமைச்சர் பண்டித நேரு வருகிறார் என்று அவருடைய அதிகாரத்திற்குதான் செல்வாக்குண்டு.

காமராசர் திருவண்ணாமலை சென்று நான் மந்திரி என்ற 'கோட்டை' கழட்டிகோட்டையிலே போட்டு விட்டேன். நான் சாதாரண காங்கிரஸ் தொண்டன் என்ற முறையில் வந்திருக்கிறேன் என்று சொன்னால் அங்கு கலெக்டர்துரைக்கு என்ன வேலை? போலீஸாருக்கும் சப் இன்ஸ்பெக்டர்களுக்கும் என்ன வேலை; வந்திருப்பவர் விருதுநகர் வீரர்; பச்சை தமிழர் பராக் பராக் என்று சொல்வார்கள்;

முதலமைச்சர் காமராசர் வருகிறார் என்றுதான் சொல்வார்கள்! பார்வையில்ஒருபயம் ஏற்படும்! உருவத்தைப் பார்த்தல்ல; அதிகாரத்தைக் கண்டு பயம் ஏற்படும் முதலமைச்சர் காமராசர் என்று எவ்வாறு பிரித்துக் கொள்ள முடியும்?

எதிர்கட்சிகளுக்கு மறுப்பு

(9-ம் பக்கம் பார்க்க)

அற்புதமான ஓவியம்! 28-6-63 இதழில்!!

சர்க்காரை சந்திக்கிழுத்த

சரசவல்லி

[படங்களோடு]

ஒவ்வொரு வாரமும் புதுப்புது அம்சங்கள்

★ "அறப்போர்" ★

ஆசிரியர்: அரங்கண்ணல் எம். எல். ஏ.

"அறப்போர்" அபிராமபுரம், சென்னை-18.

கவனிக்க

'அறப்போர், சம்மந்தமாக கடிதம் எழுதுவோர், 'நிர்வாகி, அறப்போர், 9. ஏ. டாக்டர் சி. பி. ஆர். ரோடு, சென்னை-18.' என்ற முகவரிக்கு எழுதுக.

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

சந்தா விவரம்

உள்நாடு
ஆண்டு சந்தா 8—00
6 மாத சநதா 4—50
வெளிநாடு
ஆண்டு சந்தா 9—00
6 மாத சந்தா 5—00

ஒளி - 3 | 21-6-'63 வெள்ளி | கதிர் - 15

★ "அப்பாவுக்கு விடுதலை கொடு!" ★

பஜ்ஜி செய்து வைத்தார்கள்! பழரசம் தந்தார்கள்! அதைவிடச் சுவையானப் பாராட்டுகளைக் குவித்தார்கள்! இராணியார் புகழ்ந்தார் இந்தியாவை! பரவசமானார் குடியரசுத் தலைவர் ராதா கிருட்டிணன்!—என்றெல்லாம், இலண்டன் மாநகரில், இந்திய குடியரசுத் தலைவருக்கு நடந்த வைபவத்தைப் புகழ்ந்து எழுதும் ஏடுகளின் மூலையில் ஒரு சின்னஞ் சிறிய சேதியொன்றும், வந்திருக்கிறது.

"எங்கப்பாவை விடுதலை செய்யுங்கள்!" என்றுஉருக்கமாக ஒரு மகன், கடிதம், எழுதியிருக்கிறான்.

"சுதந்திரம், சுயராஜ்யம் ஆகியவைகளைக் காப்பாற்றவே இந்தியா இருக்கிறது என்கிறீர்களே! இவைகளை உருவாக்கப் போராடிய என் அப்பாவை மட்டும், சிறையில் அடைத்துப் பூட்டி வைத்திருக்கிறீர்களே? அரசியல் சட்டத்தில் கூட அழகாகத் தனி மனித சுதந்திரம் பற்றி எழுதி வைத்திருக்கிறீர்களே? என் அப்பாவை மட்டும் ஆண்டாண்டுகாலமாகச்சிறைவாசத்தில் போட்டு வதைக்கலாமா? அது அழகா! நியாயமா!! என்று வேதனையோடு விடுத்திருக்கிறான், கடிதம்.

டில்லியிலிருக்கும்போது போனால் குடியரசுத் தலைவரின் பார்வையில் படுமோ, படாதோ, என்றெண்ணி இலண்டன் மாநகரில் இன்பமான விருந்தைக் கண்டு களிக்கும் ராதா கிருட்டினனுருக்கு இந்த 'மருந்தை' அனுப்பியிருக்கிறான், அம் மகன்.

அப்பா வாழ்ந்தவிதம்—அப்பாவும் பண்டித நேருவும் சேர்ந்து சிரித்து நண்பர்களாய் இருந்த காட்சி—காந்தியடிகள் படத்துக்கு ஒவ்வொரு நாளும் தந்தை மாலை அணிவித்த சம்பவம்—வெள்ளைக்காரனை எதிர்த்துப் பல தடவை, பெற்றவர் சிறைக்குச் சென்ற வைபவங்கள், எல்லாவற்றையும் எண்ணி யெண்ணி அம்மகன் மனம் துடிக்கிறது போலும்! இலண்டன் மாநகரிலாவது குடியரசுத் தலைவரின் கவனத்தில் படாதா என்று கடிதம் அனுப்பியிருக்கிறான்; அப்பாவை விடுதலை செய்யுங்கள் என்று வேண்டி!!

0 0 0

சிங்கம், தங்கம், எல்லைக் கிளி, எமது நேருவின் இன்னொரு உயிர், என்றெல்லாம் ஒரு காலத்தில் போற்றப்பட்ட காஷ்மீரத்தலைவர் ஷேக் அப்துல்லாவின் திருமகன் தாரிக் அப்துல்லா தான் இவ்வண்ணம் கடிதம் எழுதியிருக்கிறான். பெற்ற மகன் தன் விடுதலைக்குக் கடிதம் எழுத வேண்டிய அளவுக்குத் தனது நிலை வந்ததே யென்றெண்ணி காஷ்மீரச் சிறையில் எப்படியெப்படி கண்ணீர் வடிக்கிறாரோ அப்துல்லா யாமறியோம்!

இந்தியத் துணைக்கண்டத்தில் எல்லையிலே காங்கிரசை வளர்த்தவர்களில் ஷேக் அப்துல்லாவையும், கான்அப்துல் கபார் கானையும் மறக்க முடியாது. அப்துல்லாவைக் காஷ்மீரச் சிங்கம் என்பார்கள்! கபார்கானை எல்லைக் காந்தியென்று அழைப்பார்கள்!! எல்லைக் காந்தியின் பூமி பாகிஸ்தானில் அமைந்த நாள் முதல் சந்தேகத்துக்குஆளாகிச்சிறையேவாழ்வெனக்கிடக்கிறார். காஷ்மீரச் சிங்கமும் கண்டனத்துக்காளாகிச் சிறைக்குள்ளே பூட்டப்பட்டு கிடக்கிறார்! எல்லைக் காந்தியைச் சிறைப் படுத்தி வைத்திருக்கும் பாகிஸ்தான் அரசை சர்வாதிகார நாடு என்கிறார்கள். அப்துல்லாவைச் சிறைக்குள் பூட்டி வைத்திருக்கும் இந்தியாவை ஜனநாயக நாடு என்கிறார்கள். கபார்கானாவது முஸ்லீம்லீகுக்கு ஆதி முதல் எதிரி! எதிரியை எதிரி சந்தேகப் படுவது இயற்கை! அப்துல்லா ஆதி முதல் காங்கிரஸ்வாதி. நண்பரை நண்பர்களேசந்தேகப்பட்டதோடுமட்டுமன்றிபழியும் வாங்குகிறார்கள்!!

அப்துல்லா காஷ்மீரம் தனியாக வேண்டுமென்றார்! அதனால், துரோகி என்று குற்றம் சாட்டப்பட்டு பூட்டப் பட்டு விட்டார். காஷ்மீரம், சுதந்திரம் பெற்ற நாள் முதல், இரண்டு வில்லன்களுக்கிடையிலே சிக்கிய கதாநாயகியாகப் படாதபாடுபட்டு வருவதை உலகம் அறியும்.

இந்தியாவும், பாகிஸ்தானும்—தானே காதலன் என்கிறார்கள். அதிலும் இந்தியா காஷ்மீரத்துக்குப் பல சலுகைகளைத் தந்திருக்கிறது! அதில் முக்கியமானது, இன்றைக்கும் யாராவது காஷ்மீரத்திற்குப்போகவேண்டுமென்றால் அந்த அரசின் உத்திரவின்றி நுழைய முடியாது, வேற்று நாட்டுக்கும் வேற்று நாட்டுக்குமுள்ள சலுகை தரப்பட்டிருக்கிறது, காஷ்மீரத்துக்கு. ஆனாலும் அது இந்தியாவில் ஒரு அங்கம், என்று சொல்லப்படுகிறது!!

அங்கு மட்டுமென்ன? அண்மையில் பாண்டிச்சேரிக்கு வந்த பண்டித நேரு என்ன பகன்றார்! புதுவை மக்களைப் பார்த்து, "உங்களுடைய பழக்க வழக்கங்களும் நடைமுறைகளும் தமிழ் நாட்டைப் போலத்தான் உள்ளன. ஆனாலும், நீங்கள் தனித்து இருக்கலாம்", என்றார். இதே போலத்தான், கோவா மக்களை பார்த்துக் கூறிவிட்டு வந்தார்.

"இல்லை! இல்லை!! தனி வழக்கங்கள் இல்லை. அதனால் நீங்கள் தமிழ் நாட்டோடு சேர்ந்து வாழத்தான் வேண்டும். எத்தனை நாளைக்கு இரண்டொரு தாலுகா மட்டும் தனியமைப்பாகயிருப்பது?", என்று புதுவை மக்களைப் பார்த்துக் கேட்கவில்லை, நேரு. கேட்பது நியாயமானதல்ல என்ற காரணத்தாலா? அல்ல! அல்ல!! அப்படிக் கேட்டால், இப்போது உடனே புதுவை மக்களால் அதைச் சீரணம் செய்து கொள்ள முடியாது, நாளாகட்டும் என்பதால்தான்.

அதே புதுவையைப் போலத் தென்னகமும் அரசியல்உரிமைகளை—காஷ்மீரத்தைவிட அதிகமாகப் பெற்று வாழ வேண்டும் என்கிற திராவிடநாடு கோரிக்கையை கேட்டால், செச்சே! பிரிவினையா! என்று சீறுகிறார், பண்டிதர். அப்படிக் கேட்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நமக்கெல்லாம் சிறைவாசம்! தேர்தலில் நிற்கத்தடை! எல்லாம் வரும் என்று மிரட்டல் கணைகள் ஏவிவிடப்படுகிறது.

என்னதான் நேர்மையோ! நியாயமோ!! இதெல்லாம், பண்டிதநேருவும் அவரது காங்கிரசும், எந்தளவுக்கு ஆட்சி அதிகாரத்துக்காக மனசாட்சியை விற்று விட்டு நடக்கிறார்கள் என்பதையே காட்டுகிறது.

பண்டித நேருவைப் போலப் பக்குவமும் பண்பும் கொண்ட ஒரு ஜனநாயகவாதியைக் காணல் அரிது! அவருக்கே இது போன்ற முக்கிய பிரச்சினைகளில் தள்ளாட்டமும் குழப்பமும் வருகிறதென்றால், அவருக்குப்பின் இந்தியாவை ஆளப்போகிறவர்களின் நிலைஎப்படியிருக்குமோ!!!

நேருவும் அப்துல்லாவும் அண்ணனும் தம்பியும் போல இருந்தவர்கள். தம்பி இன்று சிறையில்! அண்ணன் ஓய்வெடுக்கப் போகிறாராம், காஷ்மீரத்துக்கு!!

அரசியல், மனச்சாட்சியைக் கூடவாக் கொன்று விடும்?

(8-ம் பக்கம் பார்க்க)

அரசியல் நிர்ணய சபை நிகழ்ச்சி:

“ நான் இந்தி படித்தேன் பலருக்குச் சொல்லியும் கொடுத்தேன். ஆனால்...!”

துர்காபாய் தேஷ்முக் எழுப்பிய சங்கநாதம்!

தெலுங்கு ஏன் தேசீய மொழியாகக்கூடாது?

வடவர் தமிழ் படிக்க வேண்டும்

நாங்கள் தியாகம் செய்கிறோம்!

நீங்கள் ‘திமிர்’ கொண்டிருக்கிறீர்கள் !!

[முன்னாள் டில்லி நிதியமைச்சர் சி. டி. தேஷ்முக்கின் மனைவியாக விளங்குகிற துர்காபாய் அரசியல் சட்ட விவாதத்தில்காரசாரமாகப் பேசினார் ஆங்கிலத்தில். அப்படியேதந்துள்ளோம், தமிழில்]

துர்க்காபாய் (சென்னை):—

ஸ்ரீரியோ தவறோ, பலதரப்பட்ட கலாச்சாரங்கள் நிரம்பிய இந்தத் தேசத்திலுள்ள பல மொழிகளும் வளர்வதைத் தடுக்க, இந்தி பேசும் பகுதிக்காரர்கள் தீவிரமாகச் சண்டை போடுகிறார்கள்என்கிற கருத்து இந்தி பேசாதப் பிரதேசங்களில் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திவேண்டும், இந்தியிலேயே எண்களிருக்க வேண்டும் என்று சொல்கிற சிலஉறுப்பினர்கள், “நாங்கள் சொல்வதில் 90 சதவிகிதம் ஏற்றுக்கொண்டிருக்கிறபொழுது 10 சதவிகிதத்தை ஏற்றுக் கொள்ள ஏன் யோசிக்கிறீர்கள்?”, என்று கேட்பதாகக் கேள்விப் படுகிறேன். உங்கள் முடிவை நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்றால் எந்தளவுக்கு தியாகம் செய்திருக்கிறோம் தெரியுமா? “அப்படியென்ன தியாகம் செய்தீர்கள். நீங்கள் ஏற்க வேண்டியது தானே! ஏற்கத்தான் வேண்டும்”, என்று சில நண்பர்கள் சொல்லாம். இப்படித்தான் இந்திப் பேசுகின்றவர்கள் எங்களைப் பார்த்துச்சொல்கிறார்கள்.

இந்தியாவினுடைய தேசீய மொழி என்று சொல்லப்படுவது இந்தியும் உர்தூவும் கலந்த இந்துஸ்தானியைத் தவிர வேறொன்றும் இருக்க முடியாது;இருக்கக்கூடாது. ஆனால் நான் மேலே குறிப்பிட்ட நண்பர்களின் திருப்திக்காக தேவநாகரிலிபி கொண்ட இந்தியை நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

[தேவநாகரிலிபி, பெரும்பாலும் சம்ஸ்கிருதஎழுத்துக்களாகும், இதைக் கொண்டது இந்தி! ஆனால் இந்துஸ்தானி என்பதுஉருதுலிபியைக்கொண்டதாகும்! முதலில், இந்தியாவின் தேசீய மொழியாக ‘இந்துஸ்தானி’யேயிருக்கவேண்டும் என்று பேசப்பட்டது. அப்படியானால் உருது பேசும் முஸ்லீம்களுக்கு இடம் கொடுத்ததாகிவிடுமென்று வடநாட்டு இந்து மத வெறியர்கள் காங்கிரஸ் போர்வையில் கிளர்ச்சி செய்தனர். அதே ஆசாமிகள்தான் இன்னும் இந்தித் திணிப்பில் ஆர்வம்காட்டி வருகின்றனர். —(ஆசிரியர்)]

இதற்கு நாங்கள் சம்மதித்ததே ஒரு தியாகம்தான். ஏன் என்றால் உருது எழுத்தைக் கொண்ட இந்துஸ்தானியேயிருக்கலாம் என்று பலகாலமாய்ப் பேசிவந்தவர்கள் நாம். அதை விட்டது என்பது சமான்யமா?கொஞ்சங்கூடச் சண்டை போடாமல் காந்தியத் தத்துவப்படி அமைதியாக விட்டுக் கொடுத்திருக்கிறோம் எல்லோருக்கும் புரிந்த, சொந்தமொழி தான்தேசீயமொழியாகயிருக்க வேண்டும் என்பதுதான் காந்தியடிகள் சொன்னது; விரும்பியது. இதை விட்டுக் கொடுத்திருக்கிறோம், நாங்கள்.

ஒரு வேளை தாண்டன்ஜிக்கும் சேட் கோவிந்ததாஸ்ஜிக்கும் மற்றவர்களுக்கும், தென்னாட்டில் இந்திக்கு உள்ள எதிர்ப்புதெரியாமலிருக்கலாம் இந்தி வேண்டும் என்று சொல்வது மாகாண மொழிகளை அடியோடு ஒழிப்பது என்று இந்தி எதிர்ப்பாளர்கள் கருதுகிறார்கள். தங்கள் மொழியையும் கலாச்சாரத்தையும் ஒழித்துக் கட்டவே இந்த முயற்சி செய்யப்படுவதாக எண்ணுகிறார்கள். தென்னாட்டிலுள்ள இந்தி எதிர்ப்பு இயக்கம் பலமானது.

இதைப் பற்றி நண்பர் டாக்டர் சுப்பராயன் அவர்கள் நேற்று விளக்கமாகச் சொன்னார்கள். இந்தியை ஆதரிக்கின்ற நிலையிலுள்ள நாங்கள் என்ன செய்தோம்? பலமான அந்த இயக்கத்தையும் எதிர்த்துத் தெற்கில்இந்திப்பிரசாரம் செய்கிறோம். இந்தி சாகித்ய சம்மேளனத்தின் பண்டிதர்கள் இந்தியாவுக்கு ஒரு பொது மொழி வேண்டும் என்று சொல்வதற்கு முன்பிருந்தே இதைச் செய்கிறோம்.மகாத்மா காந்தி சொன்னார் என்பதற்காகக் கீழ்படிந்து நாங்கள் செய்துவருகிறோம். எங்களுக்கு எவ்வளவோ அசௌகரியங்களும் சிக்கல்களும் இருந்தாலும் செய்து வருகிறோம்.

......தேசீய உணர்ச்சியோடு தென்னாட்டிலுள்ள நாங்கள் தன்னாலே முன் வந்து செய்கிற சேவை என்பதை எனது நண்பர்கள் எண்ண வேண்டும். 1923-ல் காகிநாடாவில் கூடிய காங்கிரசுக்கு வந்த சேத் ஜம்னாலால் பஜாஜ், அங்கே சில மாதர் சங்கத்தார் இந்தி சொல்லிக் கொடுப்பதைப் பார்த்து நன்கொடை தர முன் வந்தார். தேசீய மொழியை பரப்ப நாங்கள் செய்யும் சேவைக்காக பிரதிபலனைஎதிர்பார்க்கவில்லை என்று சொன்னவர்கள் நாங்கள்.

இப்படியெல்லாம் நாங்கள் செய்ததன் பலன் என்ன? இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலேயே இந்திக்காகப் பாடுபட்ட நான் உங்கள் போக்கைக் கண்டு அதிர்ச்சியடைகிறேன். ஒரு மாகாண மொழிக்குத் தேசீய உருவம் கொடுக்க வேண்டும் என்கிற உங்கள் போக்குதான் இந்தி பேசாத மக்களின் எரிச்சலுக்கு மூலகாரணமாகும். இந்தப் போக்கு எங்களைப்போல தேவநாகரி எழுத்தோடு கூடிய இந்தியை ஏற்றுக் கொண்டிருக்கிற எங்களுடைய மனதை யெல்லாம் புண்படுத்திவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன். சுருங்கச் சொன்னால், உங்களுடைய தவறான பிரச்சாரமும், வேண்டுமென்று செய்யும் பிடிவாதமும், என்னைப் போல இந்திக்காகப் பாடுபட்டவர்களுடைய அனுதாபத்தையும் ஆதரவையும் கூட இழந்துவிடச் செய்யும் என்பதை எச்சரிக்கிறேன்!

தேசீய ஒற்றுமையை முன்னிட்டு ‘இந்துஸ்தானி’யே இந்தியத்தேசீய மொழியாக இருக்கக்கூடியது என்று சொன்னேன்.

முஸ்லீம்களைப் போன்ற மைனாரிடி மக்களுடைய நன்மைகளையும் வசதிகளையும் நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். நீங்கள் சொன்னதை (தேவநாகரி லிபியோடு கூடிய இந்தியை—ஆ—ர்) அவர்கள் மிகப் பெருந்தன்மையோடு ஏற்றுக் கொண்டு உங்களோடு வர சம்மதித்திருப்பது பெரிய விஷயமாகும். இலக்கிய வளத்தையும் இன்றுள்ள அகில உலகச் சிறப்பையும் வைத்துப் பார்த்தால் எல்லா வழிகளிலும் தேசீயமொழியாகும் தன்மையைப் பெற்றது வங்காள மொழியாகும்! இனிமையையும் இந்தியாவிலேயே அதிகமான மக்கள் பேசும் இரண்டாவது மொழி என்பதையும் வைத்துப் பார்த்தால் தெலுங்கு மொழியும் இந்தியாவின் தேசீய மொழியாகலாம்! ஆனால் இதைப் பற்றி நாங்கள் வாயே திறக்கவில்லை; வாதாடவும் இல்லை. இந்த மொழிகளில் ஏதாவதொன்று தேசீய மொழியாகலாம் என்று யோசனைகூடச் சொல்லவில்லை.

இவ்வளவு பொறுப்போடு பொறுமையோடு, நீங்கள் சொன்னதை ஒப்புக்கொள்கிற ‘தியாகம்’ செய்திருக்கிற எங்களைப் பார்த்து ‘இந்தியிலேயே எண்களும் இருக்க வேண்டும்’ என்கிறீர்கள். சொல்லத் தயங்குகிறேன் ஆனாலும் நான் சொல்லித்தானாக வேண்டும்—இதைவிடப் பெரிய மொழிக் கொடுமை யில்லை! பொறுக்க முடியாத நிலையின்.

உச்சி இது!!

தேவநாகரி எழுத்திலுள்ள இந்தியை சில நிபந்தனைகளோடுதான் ஒத்துக் கொண்டிருக்கிறோம்.

நிபந்தனை நம்பர் 1:

அதன் பெயர், எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும்—இந்தியா! இந்துஸ்தானியா! என்கிற தகராறில் நான் தலையிட விரும்பவில்லை——எந்தப் பெயரோ இருக்கட்டும், அந்த மொழி பழக்கத்திலுள்ள வட்டார மொழிகளின் வார்த்தைகளை யெல்லாம் எடுத்துக் கொள்ள வேண்டும் அப்பொழுதுதான் அதைத் தேசீய மொழியாக எங்களை ஏற்றுக்கொள்ளச் சொல்வதில் அர்த்தமுண்டு. மத்திய மாகாணத்திலும் ஐக்கிய மாகாணத்திலும் முத்திரைக் குத்தப்பட்ட இந்தியாக அது இருக்கக்கூடாது. [...இப்படிப் பேசினார்களே ஒழிய இதுநாள் வரையில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், வங்காளி, மராட்டி ஆகிய மொழிகளிலிருந்து ஒரு வார்த்தையைக் கூட எடுத்துக் கொள்ளவில்லை! மாறாக ‘நயா’ பைசாவும், ராஜபால, கிருகமும், ராஜ்ய பாலரும், லோக் சபாவும்......தான் நுழைந்து கொண்டிருக்கின்றன!!--(ஆ-ர்]

இரண்டாவது நிபந்தனை,

இப்போதுள்ள நிலைமையே குறைந்த பட்சம் ஒரு பதினைந்து ஆண்டுகளுக்காவது நீடிக்க வேண்டும். அப்போது தான் எங்களால், இந்தப் புதிய சூழ்நிலையைத் தாங்க முடியும். இதைக் கூடச் சம்மதிப்பவர்களாக இந்திக்காரர்கள் இல்லை “சிலருக்குப் பேசத் தெரிந்தால் போதும். நாளைக்கே இந்தியை அமுல் செய்யுங்கள்” என்கிறார்கள். தலைவர் அவர்களே நான் கேட்கிறேன், இப்போது நிறைவேற்றப்படும் இந்த அரசியலமைப்பை நாம் மட்டும் வைத்துக் கொள்ளப் போகிறோமோ? நம் வாழ் நாள் இருக்கிற வரைக்கும் இது இருந்துவிட்டால் போதும் என்று எண்ணுகிறோமோ? நமது குழந்தைகள்,எதிர்காலச் சந்ததியரின் கதி என்ன? அவர்கள் இதை வைத்துக் கொள்ள வேண்டுமா! வேண்டாமா? நான் என் சொந்த அனுபவத்தைச் சொல்கிறேன்:

நான் இந்தி படித்தேன்; தெற்கில் நூற்றுக்கணக்கான மாதர்களுக்குச் சொல்லியும் கொடுத்தேன். என்னுடைய அனுபவம் என்ன தெரியுமா? இந்தியில் என்னென்ன பரீட்சைகள் உண்டோ அத்தனையையும் தேறியவர்களால்கூட எழுதவும் படிக்கவும் முடியுமேயொழிய, பேசவராது. பேசுவதென்றால் அதற்கான சூழ்நிலை தேவை. தெற்கே, எங்கேயிருக்கிறது, இந்தச் சூழ்நிலை? நாங்கள் படித்ததைப் பேச தெற்கில் எங்களுக்குஒரு இடம் கூடக் கிடையாது.

நீங்கள் தென்னாட்டுக்கு வந்துஅங்குள்ளஒரு மொழியை பேசவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகும் போதுதான் நான் சொல்வது உங்களுக்குச்சரியாகப்புரியும். பொறுமையாயிருக்கப் பழகிக் கொள்ளுங்கள். இதைக்கூடவா எங்களுக்காக நீங்கள் செய்யக் கூடாது?

மூன்றாவது நிபந்தனை:

எங்களுடைய மொழிகளில் ஒன்றை நீங்கள் படித்தாக வேண்டும், வங்காளமா, தமிழா, தெலுங்கா, அல்லது கன்னடமா என்கிற கவலையில்லை, ஏதாவது ஒரு மாகாண மொழியை படித்தாக வேண்டும். சாகித்யசம்மேளனம் இது பற்றி தீர்மானிப்பதாக நேற்று பேசிய டாக்டர் சியாமபிரசாத் முகர்ஜ் சொன்னார், அந்தச் சம்மேளனத்தின் தீர்மானத்தை, அதன் உறுப்பினர் அதன் உறுப்பினர்களாயுள்ள மாகாண முதலமைச்சர்கள் எப்படி நிறைவேற்றுகிறார்கள் என்பதைப் பார்ப்போம். (1949 செப்டம்பர் 14-ல் சொன்னார்கள். வடக்கே ஒரு இடத்திலாவது தமிழ்கட்டாயமுண்டா இந்த 14 ஆண்டுகளில்? (ஆ-ர்)

......தலைவர் அவர்களே நான் இன்னொரு முக்கியமான விஷயத்தையும் உங்கள்கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன். அதிகார மொழிஎன்கிற தகுதிக்கு இந்தியை உயர்த்தியிருக்கிறோம். அந்த இந்தியை நாங்கள் படிக்க வேண்டும். ஆனால், எங்களிடம் பணவசதி கிடையாது. இப்பொழுதே எங்கள் மாகாணங்களிலுள்ள கல்லாமையைப் போக்க நிறைய செலவுசெய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, இந்தியில்லாத மாகாணங்களுக்கு, மத்ய சர்க்காரே இந்தியைப் பரப்பப் பணம் கொடுத்தாக வேண்டும்.

இந்த நிபந்தனைகளோடு தான் நாங்கள் இந்தியை ஏற்றுக் கொள்ளுகிறோம் என்பதை மறந்துவிடாதீர்கள்!!

இறுதி மூச்சு உள்ளவரை எதிர்ப்போம்!

தமிழ் மொழி மந்தியையும் மனிதனுக்கும் தன்மை பெற்றது. ஆனால் இந்தியோ மனிதனையும் மந்தியாக்கும் தன்மையுடையது.

இந்தி மொழி இந்தியாவில் தோன்றி சற்றேறக் குறைய 200 ஆண்டுகள்தான் ஆகியிருக்கும். அது ஒரு தாஸையோ, ஜெகதீச சந்திரபோசையோ, பாணர்ஜியையோ, பி. சி. ராயையோ, ஒரு தாகூரையோ உண்டாக்கிக் கொடுக்கவில்லை. வங்காள மொழிதான் அவர்களை உண்டாக்கிக் கொடுத்தது.

ஆகவே கலையற்ற, பண்பற்ற, கலைஞர்களை ஈன்றெடுக்கும் ஆற்றல் அற்ற, மனிதர்களின் மனிதத் தன்மை அகற்றி அவர்களை மந்திகளாக ஆக்கவல்ல இவ்விந்தி மொழி இந்நாட்டு மக்களுக்குத் தேவையற்றது. இதை நாம் எதிர்த்தே தீரவேண்டும்.

ஒருகாலத்தில் நாவலந் தீவு பூராவும், இன்றைய பாரத கண்டம் பூராவும் பரவியிருந்த தமிழகம் விந்தியம் வரை குறுகி, இன்று வேங்கடம் வரை குறுகி நிற்கிறது. இந்த நிலைமையில் இத்தமிழகத்தில் இந்தி நுழைந்து விடுமானால் தமிழகமே மறைந்து போகும். —மாண்டு போகும்!

ஆகவே இதைக் கடைசி மூச்சுள்ளவரை ஒவ்வொரு தமிழனும் எதிர்த்தே தீரவேண்டும்.

திரு. வி. க.

தாயகமே புறப்படு!

"நீங்கள் என்னை நம்பியிருக்கிறீர்கள்; என்னால் உங்களுக்கு ஏதும் செய்ய முடியாது! என்னால் உங்கள் வாழ்வில் கண்ணீர் பெருகும்! உங்கள் வாழ்வை வளமாக்குவேன் என்று உறுதி சொல்ல மாட்டேன்; ஆனால் ஒன்று மட்டும் உறுதியாக உங்களுக்குச் செய்வேன்! அதற்கு நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு வேளை உணவைத் தியாகம் செய்ய வேண்டும்! உங்கள் உடலிலே ஓடுகின்ற ரத்தத்தை காணிக்கையாக கொட்ட வேண்டும். ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒரு வீரன் தன்னையே அர்ப்பணிக்கத் தயாராக இருக்க வேண்டும்! அது தாய்மார்களுக்குத் தாலி கட்டிய கணவனாகவும் இருக்கலாம்! பெற்றெடுத்தப் பிள்ளையாகவும் இருக்கலாம்! அன்பும் பாசமும் பரிவும் கொண்டு உடன்பிறந்த சகோதரனாகவும் இருக்கலாம்!

யாரையும் எதையும் நீங்கள் இழக்கச் சித்தமாக வேண்டும்! இத்தனை கொடுமைகளுக்கும் நீங்கள் தயாரானால் உங்களுக்குச் சுதந்திரம் வாங்கித் தருவேன் என்று இங்கிலாந்து நாட்டு மக்களிடத்தில் வின்ஸ்டன் சர்ச்சில் கூறினார்! இங்கிலாந்து நாடு அன்று அடிமையாக இருந்தது! ஜெர்மானியாரின் ஆதிக்கத்தில் இருந்த நேரத்தில்தான் அந்த நாட்டு மக்களிடம் பேசினான் சர்ச்சில்!

இந்தியத் துணைக் கண்டம் சுதந்திரம் அடைந்தது வெள்ளையனிடமிருந்து; ஆனால் வடநாட்டு ஏகாதிபத்திய இந்தி வெறியர்களிடமிருந்து பதின்மூன்று மொழி மாநிலங்கள் சுதந்திரம் அடையவில்லை. இன்னும் அடிமையாக கப்பம் கட்டி கையேந்தும் அவல நிலையில்தான் இந்தியா இருக்கிறது இந்தியாவில் வறுமை வளர்ச்சி பெற்ற அளவு வேறெதுவும் வளர்ச்சி பெறவில்லை; லஞ்சம் வளர்ந்திருக்கிற நிலைக்கு எதுவும் வளர்ச்சிப் பெற்றதாகத் தெரியவில்லை; புள்ளி விபரங்களில் வளர்ச்சியைக் காணலாம் நாட்டில் வறுமையையும் பசிப் பிணியையும்—லஞ்சப் பேயையும்தான் காண முடியும்!

இந்திய அரசின் அவல நிலையை எடுத்துச் சொல்லி தி. மு. கழகம் பிரிவினைக் கோரிக்கையை வலியுறுத்துகிறது! இந்தியா இன்று இருக்கக்கூடிய நிலையிலேயே இருக்குமானால் நாளடைவில் இந்திய அரசு நிலை எந்தவித பரிதாபத்திற்கு ஆளாகுமோ என்பது ஐயப்பாடே!

இந்திய ஆட்சியில் அமர்ந்திருக்கும் அத்தனைப் பெரிய மனிதர்களும் இந்தி வெறியர்கள்! இந்தியா முழுதுமே இந்தி மொழியை திணித்து இந்தியா இந்திக்காரர்களின் ஆட்சியில் என்றென்றும் இருக்க வேண்டும் என்பது அவர்களின் நச்சு எண்ணமாகும்! அதற்காகவே சதி செய்து சட்டமும் தீட்டி விட்டார்கள்! இனியும் பொறுத்திருந்தால் எதிர்காலத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழ்நாடு என்று ஒன்று இருந்ததா என்று கேட்குமளவுக்கு தமிழகம் தரம்கெட்டு தாழ்ந்த நிலையில் இருக்கக்கூடிய அவல நிலை ஏற்படும்!

ஆகவேதான் "இனியும் பொறுக்க முடியாது; பொறுத்தது போதும்! பொங்கியெழு திராவிடனே!" என்று திராவிடத்தின் தனிப்பெரும் தலைவர் அறிஞர் அழைக்கவில்லை.

உங்களை சட்ட மன்றத்துக்கு அனுப்பி அகமகிழ வேண்டியவன் பாராளுமன்றத்திற்கு அனுப்பி பூரிப்படைய வேண்டியவன் நகர மன்றத்திற்கு அனுப்பி அகம் குளிர வேண்டிய நான்; உங்களை உல்லாச வாழ்வில் கண்டு புளங்காகிதமடைய வேண்டியவன்; கஞ்சிக் சட்டிஏந்த வாருங்கள் என்று அழைக்கிறேன்.

என் உள்ளம் வேதனைப் புயலில் சிக்கி இருந்தாலும் நாம் இது வரை—விழிபோல் காத்திருந்த கன்னல் தமிழுக்கு ஆபத்து. நம்மின் மொழிக்கு ஆபத்தென்றால் நம்மின் வாழ்விற்கு வந்த ஆபத்துதான்! இந்த ஆபத்தை தடுத்து நிறுத்த "நீங்கள்ரத்தம் சிந்தத் தயாராகவேண்டும்! உங்களையே நீங்கள் தியாகம் செய்து கொள்ள முன் வர வேண்டும்!

"பத்து மாதம் சுமந்து ஈன்றெடுத்து பாலூட்டி வளர்த்த அன்னையை—தோளிலே தூக்கி வளர்த்த தந்தையை மறக்க வேண்டும்!"

"உங்களுக்கு அன்பு முகம் காட்டி ஆசை மொழி பேசும் உங்கள் மனைவியை மறக்க வேண்டும்; தத்தித் தத்தீஅழகு தமிழில் மழலை மொழி சிந்திடும் உங்கள் இளம் பிஞ்சுகளை அதன் மீது நீங்கள் கொண்டிருக்கும் அன்பை—பற்றை—பாசத்தை மறந்துவிட வேண்டும்!

உங்களுடன் பிறந்த உற்றாரையும் உறவினரையும், அக்காளையும் தங்கைகளையும் அண்ணன் தம்பிகளையும்நீங்கள் மறக்க வேண்டும்!

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால்முற்றும்துறந்த முனிவராக வேண்டும்.

நீங்கள் போராட்டத்தில் ஈடுபடுகின்ற நேரத்தில் துப்பாக்கிக் குண்டுக்கும் தடியடிக்கும் கண்ணீர் புகைக்கும் ஆளாக வேண்டும்! அந்த நேரந்தில் உங்கள் கண்களை இழக்க நேரிடும்! உங்கள் கைகால்கள் முறியலாம்! இத்தனைக் கொடுமைகளையும் நீங்கள் அனுபவிக்கத் தயாரானால் ஈடுபடுங்கள்! உங்கள் மொழியைகாப்பாற்றுகிறேன்; அன்னைத் தமிழை அரியாசனமேற்றுகிறேன்! உங்களுக்கு உங்கள் நாட்டை வாங்கித் தருகிறேன்! இதுதான் என்னால் உங்களுக்கு செய்ய முடியும் என்று திராவிடத்து சர்ச்சில் நமக்கு சொல்லிவிட்டார். நம்முடைய அண்ணா முடிவு கட்டி விட்டார் சிறை செல்ல; உங்களுடைய முடிவென்ன என்று கேட்கிறார்.

"நம்முடைய சமுதாயம் சிந்திய கண்ணீர் வீண் போகவில்லை; திரண்டெழுவீர்! திண்தோள் தீரர்காள்! வீரமுடன் வந்திடுவீர்! வெற்றிக்கொடி நாட்டிடுவோம்!"

முழங்கினான்; அடிமைப்பட்டு ஆற்றாதழுத கண்ணீரில்திளைத்துக் கிடந்த தாயகத்தின் கை விலங்கை ஒடித்தெறிந்தான்.

யார் தெரியுமா? எங்கே தெரியுமா? அமெரிக்காக் கண்டத்தில்; மனிதனை மிருகமாக மதித்து பணத்திமிரிலேஆணவ வெறியில் மிருகமாக நடத்திய பெரிய மனிதர்களின் ஆணவ திமிர் அடக்கிய வீரன் ஆபிரகாம் லிங்கன்தான்!

இந்திய ஏகாதிபத்தியமே!! மேற்கூறிய சம்பவத்தை உனக்கு காணிக்கையாக்குகிறோம்.

அதேபோல் இந்தியத் துணை கண்டத்தில் அதிகாரத் திமிர் கொண்டு இந்தி மொழி திணிக்கும் இந்தி வெறியர்களின் ஆணவத் திமிர்அடக்க நம்மின் தாய் மொழி காக்க நம்மின் உரிமையை நிலைநாட்ட தனியாட்சி காண தாயகமே புறப்படு!!

அ. மாசிலாமணி

(5- ம் பக்கத் தொடர்ச்சி)

மகன் கடிதம் எழுதுகிறான், அப்பாவை விடுவிக்கக்கூடாதா என்று கெஞ்சி!

நிச்சயம் மனம் நெகிழ்வார் பண்டிதர்—ஆனால், மறுகணமே காஷ்மீர இன்றையப் பிரதமர் பக்ஷிகுலாம், கண்முன் தெரிவார்

சிறையில் கிடக்கும் அப்துல்லா எங்கே! முதலமைச்சர் குலாம் எங்கே!!

இருவரில், 'தராசு' முதலமைச்சர் பக்கமே பாயும். அப்துல்லா, பதவியில் இல்லையே!!

பண்டிதர் உல்லாசமாகப் பவனி வருவார் காஷ்மீரில்! "பிள்ளையின் கடிதம்கூடப் பெரியவர்களின் மனதைஉருகச் செய்யவில்லையே" என்று பெரு மூச்சு விடுவார் அப்துல்லா!!

நிச்சயம் அப்துல்லாவின் மகன், நேருவை வாழ்த்தமாட்டான். இந்திய அரசையும். எதிர்காலத்தில் மதிக்கமாட்டான்.

அதே போலத்தான், நமது சந்ததியின் நிலையும், நாம் அடக்கு முறைக்கு ஆளானால்,

எரிச்சலடைந்த உள்ளங்கள் எரிமலைகளை விடக் கொடுமையானவையாகும்!

0

(4—ம் பக்கத் தொடர்ச்சி)

கூற வேண்டும் எங்கள் ஆட்சியின் அழகை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் அதற்காக செல்லுகிறோம் என்று காமராசர் சொல்லலாம்! உங்கள் கட்சியில் உங்கள் கொள்கையை எடுத்துப் பேச தலைவர்களே, பேச்சாளர்களே, கிடையாதா மந்திரிகளைத்தவிர! அந்த யோக்யதை உங்கள் கட்சியில் யாருக்குமே இல்லையா?

மந்திரிகள் 9 பேருடன் ஆட்சியில் அதிகாரத்திலுள்ளோர் அதிகாரிகள் வாகனங்கள் ஜீப் இத்தனையும் காங்கிரஸ் கட்சிக்காகத்தானே வேலைசெய்கிறது திருவண்ணாமலையில்.

அம்ரோகா இடைத் தேர்தலில் காங்கிரசை எதிர்த்து கிருபளானி நின்றார்! அம்ரோகா தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் செய்யப்போன பண்டிதர் காங்கிரஸ்வெற்றிபெற்றால் காங்கிரசின் கொள்கைகளை மக்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்று பொருள். எதிர்க்கட்சி ஜெயித்தால்நம்முடையகொள்கையில் மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்றுதான் எண்ண வேண்டும் என்று பேசினார்! தற்காலிகமாக மந்திரி சபையையே அம்ரோகா தொகுதியில் மாற்றி இருந்தார்கள். திரு. ஜெகஜீவன்ராம் தேர்தல் பிரசாரம் செய்தார்; 3 கற்களை பரிசாகப் பெற்றுக் கொண்டு வந்தார்,

நேருவின் திருமகளார் இந்திரா காந்தியும் சுழன்று தேர்தல் பிரச்சாரம் செய்தார்

மந்திரி சபையே அம்ரோகாத் தொகுதியில் முற்றுக்கையிட்டு பிரச்சாரம் செய்தது; பண்டித நேரு சொன்னபடி காங்கிரசின் கொள்கைகளை மக்கள் நம்பவில்லை; அப்படியென்றால் பண்டித நேருவின் ஆட்சியை விரும்பவில்லை மக்கள் என்றுதான் பொருள்!

பண்டித நேரு செய்திருக்க வேண்டியதுஎன்ன? ராஜிநாமா செய்திருக்க வேண்டும் அவர் பேசியபடி! செய்தாரா என்றால் இல்லை!

காமராசர் திருவண்ணாமலையில் அறியாமையில் தடம் புரண்டு பேசிவருகிறார். தி.மு.க. கொடியைப் பார்த்து மிரள்கிறார்.:இதயத்தை இரும்பாக்கிக்கொண்டு எந்த முறையில் பேசியுள்ளார்! எதிர்க்கட்சிகள் ஜெயித்தால் கூட்டு மந்திரி சபை அமைத்து குடுமிப்பிடிச் சண்டைப் போட்டுக் கொண்டு ஒருவரை ஒருவர் குத்திக் கொண்டு சாகட்டும் என்று தன் இதயக் குமுறலை கொட்டுகிறார்.

காமராசர் ஒரு அறிவாளியாக நாகரீகம் தெரிந்த அரசியல் வாதியாக இருப்பாரானால் என்ன செய்ய வேண்டும்? திருவண்ணாமலைத் தொகுதியில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் அவர் (பத்ராசலம்) நிற்கிறார்! நல்லவர்! வல்லவர்! அரும் பெரும் தொண்டர்! ஆற்றல் மிகு தோழர்! இத்தனை முறை சிறை சென்றுள்ளார் என்று அவரின் திறமையையும் ஆற்றலையும் பற்றிப் பேசலாம்!

இன்னும்அரசியல் பண்பாடுடன் நடப்பவராயிருந்தால் காங்கிரசை எதிர்த்து நிற்கும் தி.மு.க தோழர் ப. உ. சண்முகம்! சென்ற முறை சட்டமன்றத்தில் நன்முறையில் பணியாற்றியவர்! எனது அருமைநண்பர் பக்தவத்சலமே பாராட்டியுள்ளார்; சிறந்த பேச்சாளர்! நல்ல செயலாளர்! ஆகவே நீங்கள் ஜனநாயக பண்பாட்டு முறைப்படியாரைவேண்டுமோ தேர்ந்தெடுங்கள் என்று பேசலாம்!

இன்னும் அதிகமாகப் பேச விரும்பினால் பத்ராசலம் ராஜ்கோட் கல்லூரியில் பட்டம் பெற்றவர். ப. உ. ச. வைவிடச் சிறந்த சொல்லாளர், சாமர்த்தியசாலி. தேர்தல் என்பது மக்களுக்கு ஒரு சோதனைதான் சோதனையை விலை கொடுத்து வாங்க விரும்புவதில்லை நான்; இது நாள் வரை பணம் கொடுத்து ஓட்டு வாங்கும் பஞ்சப் புத்திக்கு ஆட்பட்டிருந்தேன்! இனியும் ஓட்டிற்கென காலணா கொடுக்கமாட்டேன். சனநாயகத்தை குழி தோண்டி புதைக்கும் முட்டாள்தனமான வேலையில் இனியும் ஈடுபட மாட்டேன்! என்று பேசியிருந்தால்முதலமைச்சரைப்பாராட்டியிருக்கலாம்!

"ஆண்டால் காங்கிரசே நீதான் ஆளவேண்டும்! இல்லாவிட்டால் அரபிக்கடலில் தள்ளு என்று யாரும் எழுதிக் கொடுத்திருக்கிறார்களா? எதிர் கட்சிதான் ஒரு 5 வருடகாலம் ஆளட்டுமே!

எதிர்க்கட்சியின்பொறுப்பில் நான் இருந்து ஜனநாயகத்துக்கு உயிரூட்டுகிறேன்! கார் உள்ளளவும் நீர் உள்ளளவும் சந்திர சூரியர் உள்ள அளவும் காங்கிரஸ்தான் ஆளவேண்டுமென்பது சட்டமல்ல; அது நீதியுமல்ல, எனக்கோ கோட்டையில் ஏராளம் வேலை இருக்கிறது! நான் சென்று வருகிறேன் என்றுபேசியிருப்பாரேயானால் பாராட்டி புகழ்ந்து அகமகிழலாம்!

அரசியலில் ஆண் மகனாக இருந்திருப்பாரேயானால் இப்படித்தான் பேசியிருப்பார்! கடைந்தெடுத்த அயோக்கியதனத்துடன் பேசி வருகிறார் காமராசர்! அவர் இன்னும் பண்படவில்லை!

நாம் திருவண்ணாமலையில் நல்ல முறையில் பணியாற்றுகிறோம் இருப்பினும் சிலபல வசதிகள் இல்லை; குறிப்பாக நமக்கு பணமுடை! காங்கிரசுக்கு பண்பு முடை! நாம்இந்த தேர்தலில் வெற்றி பெற்றால் நம்முடைய புகழ் டெல்லிக் கோட்டையிலே கொடி கட்டிப் பறக்கும்! அங்குள்ள காங்கிரஸ் தோழர்கள் கட்டியணைத்து வரவேற்பார்கள்!

காங்கிரஸ் கட்சியின் வரிக் கொடுமையையும் தங்கத்திருமகனார் மொரார்ஜி தேசாயின் தங்கச் சட்டக் கொடுமைகளையும் மக்கள் ஆராய்ந்துப்பார்த்தால் மக்கள் எதிர்க் கட்சிக்குத்தான் ஓட்டளிப்பார்கள்! இந்த அடிப்படையில் நிச்சயம் தி.மு.க. வெற்றி பெறும்!

இந்தி மொழிப் போராட்டம் நீண்ட நாள் போராட்டம் நம்மின் போராட்டத்தைப் பற்றி பெரியாரும் மாஜீத் தோழர்களும் ம. பொ சி;களும் விமர்சனம் செய்கிறார்கள்! எதிலும் பக்குவப்படாதவர்கள் நூதன எண்ணங்களோடு உளறுகிறார்கள்.

"புலிக்குப் பிறந்தது பூனையாகாது"'தந்தை பெரியாரிடம் இருந்து பழக்கப்பட்ட்வர்கள் தான் நாம்! நம்மின் போராட்டம் தோல்வியடைந்து நாம் அவர்களிடம் கையேந்தி நிற்கும் காலம் வராது——வரும் வரை அவர்கள் அனுவசியமான விமர்சனங்களில் ஈடுபடுவது சரியாகாது! இது அவர்களின் மடத்தனத்தை கடைந்தெடுத்த கோழைத் தனத்தை தான் காட்டுகிறது.

நம்முடைய போராட்டம் ஆரம்பமாகப் போகிறது! தோழர்காள்! தீரர்களே! தயாராகுங்கள்!

மக்கள் பேராதரவை நம்பியே பண மலையை
எதிர்க்கிறது கழகம்.
அரசியல் ஆதிக்கத்தை முறியடிக்க
வாழ முடியாதவர்களை வாழ வைக்க

ப
உ
ச
வின்



உதய
சூரியன்
சின்னத்
தில் முத்
திரையிட்டு
ஆதரவு
தாரீர்!

இதுவே தருணம்!

தமிழின் பழம் பெருமையையும் அதன் வளத்தையும் வட நாட்டார் குறை கூறும் நிலை இப்பொழுது அங்கு ஏற்பட்டுள்ளது. தேவையான கலைச் சொற்கள் இந்தியில் இல்லாதிருந்தும் தமிழிலிருந்து அத்தகையச் சொற்களை எடுத்துக் கொள்ள வட நாட்டினர் விரும்பவில்லை.

அரசியல் சட்டத்தை இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கும் பொருட்டு டில்லியில் கூட்டப்பட்ட மாநாடு ஒன்றில் தமிழ் மொழியின் சார்பில் நான் கலந்து கொண்டேன். அப்பொழுது இந்த நிலை அங்கு நிலவியதை நான் உணர்ந்தேன்.

முதிர்ச்சியடையாத இந்தி மொழியை தென்னகத்தின்மீது திணிக்க முயல்வதை தமிழர்கள் வன்மையாக எதிர்க்க வேண்டும்! எதிர்ப்பதற்கு இதுவே தருணமாகும்!

—பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை

(3-ம்பக்கம் தொடர்ச்சி)

வில்லையாம்! அதற்குப் பதில் மந்திரி மாளவியாவின் அந்தரங்கச் செயலாளர் பி. ஏ. நாயர் எழுதியகடிதம்மட்டுமே கிடைத்திருக்கிறது.

மந்திரி மாளவியா சொல்வதில் எது உண்மை என்று இதுவரை எந்த நீதிபதியாலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

சிராஜுதீன் கம்பெனியாரிடமிருந்து மந்திரி மாளவியா 10 ஆயிரம் மட்டும் பெறவில்லை; இன்னும் பல பெருந்தொகைகளை பல தடவை பெற்றிருப்பதாக சிராஜுதீன் கம்பெனியாரின் கணக்கேடுகள் கூறுகின்றன;

சிராஜுதீன் கம்பெனியாருக்கு மத்திய அரசு, ஒரிசா மாநில அரசின் சிபாரிசின் பேரில் மாங்கனீஸ் படிவத்தை தோண்டியெடுக்கவும்—குரோமைட்டை எடுத்துக் கொள்வதற்கும் பர்மிட் வழங்கியுள்ளது.

"இது முற்றிலும் மத்திய அரசின் கொள்கைக்கு மாறுபட்டது; சட்ட விரோதமானதுங்கூட.

சட்ட விரோதமாகவும்—தொழிற் கொள்கைக்கு எதிராகவும் ஒரிசா மாநில அரசும் மத்திய அரசும் சீராஜுதீன் கம்பெனிக்கு சலுகை தரக் காரணமென்ன?

மாளவியா —— சீராஜுதீன் தொடர்பு; இந்த லஞ்சப் புகார் வழக்கை ஆராய்ந்துப் பார்த்தால் பல பெரும் புள்ளிகள் மட்டும் தொடர்பு கொண்டிருக்கவில்லை. பெரும் பொறுப்பிலிருப்பவர்களும் — இந்தப் புகாரில் தொடர்பு கொண்டிருக்கிருர்களாம்!

மந்திரி மாளவியா காங்கிரசுக் கட்சியில் இடது சாரி பிரிவினர் ஆவார்!

காங்கிரசுக் கட்சியில் சோஷலிசத்தை நிறைவேற்றுவதில் தீவிர அக்கரைக் கொண்டவர்களை,க்கொண்டதுதான்இஞ்சிக் குழுஎன்பதாகும். இக்குழுவின் முக்கிய தலைவர்களில் நேருவின் மகள் இந்திரா காந்தியும் ஒருவர்.

பாதுகாப்பு அமைச்சராக இருந்து விலகிய வி. கே. கிருஷ்ணமேனனும் மாளவியாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்!

இஞ்சிக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான அன்சர் ஆர்வானி என்பவர் மத்திய நிதியமைச்சருக்கு எழுதிய கடிதமொன்றில் இந்த விவகார விசாரணையை நிறுத்தி வைக்குமாறு வேண்டியுள்ளார்! தற்போது ஒரிசா மாநிலத்தின் துணை அமைச்சராக இருக்கும் பெரேன் மித்ரா, "அட்ரிம்" என்ற புனைப்பெயரில் சிராஜுதீன் கம்பெனியாரிடம் பணம் பெற்றிருக்கிருராம்!

பண்டித நேரு இரகசியமாக இருக்க வேண்டும் விசாரணை; என்று கூறியுள்ளார்!

நாட்டை ஆளுகின்ற காங்கிரஸ் ஆட்சியில் பொறுப்புள்ள மத்திய அமைச்சர் மீதுள்ள புகாரைப் பற்றி மக்கள் அறிய விரும்புகிருர்கள்! லஞ்சப் புகாரை ஆராய்ந்தால் இன்னும் பல பயங்கரமான உண்மைகள் புலப்படும் என்பது உறுதி, இதை மூடி மறைக்க —காங்கிரசாட்சியின் ஊழலை மக்கள் அறியாதிருக்க திரை போட்டு மறைக்கிருர் பண்டிதர்,

விசாரணையே வேண்டாம்! சிராஜுதீன் கருணை உள்ளம் கொண்டவர்! காங்கிரசைக் காப்பாற்றும் கர்த்தா! அவரைப் பற்றி எனக்கும் தெரியும் என்கிருர் அன்சர் ஆர்வானி!

"குடியுயரக் கோனுயரும்" என்ருர் ஔவையார்! நாட்டிலுள்ள மக்கள் வாழ்வு உயர்ந்தால் மக்கள் எல்லாவகை நலனும் பெற்று நல் வாழ்வு வாழ்ந்தால் அரசும் நன்முறையில் ஆட்சி செலுத்த முடியும்! நாட்டில் இல்லாமையும் பற்ருக்குறையும்— இருப்பதாலும் ஊதியம் போதாத காரணத்தாலும்தான் 'லஞ்சம்' தலைவிரித்தாடுகிறது! காங்கிரசு ஆட்சியில் எங்கும் லஞ்சம் என்பதே பேச்சாகிவிட்டது!

"அரசனெவ்வழி குடிகள் அவ்வழி" என்ற பொன்மொழி முற்றிலும் உண்மையானது, ஆட்சியிலேயே லஞ்சம் தலைவிரித்தாடுகிறதென்ருல சாதாரண ஊதியத்தில் இருப்பவர்களைப் பற்றி கேட்க வேண்டியதில்லை.

ஆனுல் ஆட்சியிருப்பவர்களுக்கு திரை போட்டு மறைக்கிருர்கள். சாதாரண உத்தியோகத்திலுள்ளவர்களை வேலையிலிருந்தே நீக்கிவிடுகிருர்கள்!

நாட்டையாளும் கட்சியே இப்படியே செய்கிறது—அதை விரட்டியடிக்க வேண்டாமோ?

தமிழகத்தில் எத்தனை பஸ் ரூட்டுகள் தனிப்பட்டோர் வசம் இருக்கிறது. பெட்ரோல் பங்குகள் அனைத்தும் தனிப்பட்டோரிடம், சினிமாக் கொட்டகைகள் தனிப்பட்டோரிடம்! ஒவ்வொரு பஸ் ரூட் முதலாளியும் பணம் வழங்காமலா இருப்பார்! தனிப்பட்ட பணத் தொந்திகளுக்கு மட்டும் பர்மிட் கொடுக்க காரணம் என்ன? தனிப்பட்ட ஒரு சிலர் மட்டும் பெட்ரோல் பங்குகளை நடத்துகிருர்களே! ஏன், பஸ் ரூட்டுகளையும், பெட்ரோல் பங்குகளையும்--சினிமாக்கொட்டகைகளையும் தேசிய மய மாக்கினுல் என்ன? என்று தி. மு. க. கேட்பதற்கு இதுவரை பதில் சொல்லாதது ஏன்?

திடீரென்று தேசிய மயமாக்கினுல் காங்கிரசை வளர்க்க—சட்டத்தைக் காலால் மிதித்தெறிந்து விட்டு—தேர்தலிலே ஜெயிக்க லட்சக் கணக்கில் பணம் கொடுப்பார் யார்? இவர்கள் பணம் கொடுக்காவிட்டால் தேர்தலிலேஜெயிக்க முடியாது, காங்கிரசு தொந்தியையும் வளர்க்க முடியாது! தானும் நீண்டநாள் பதவியில் இருக்க முடியாது என்பதைத் தவிர வேறென்ன இருக்க முடியும்!

இன்றில்லாவிட்டாலும் என்ருவது ஓர்நாள் இதைப் போன்ற லஞ்சப் புகார்களுக்குப் காமராஜரைப் போன்றவர்கள்—பணத் தொந்திகள் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்! காங்கிரசு ஆட்சியின் அழகைத் தெரிந்து கொள்ள இதைவிட வேறு என்ன வேண்டும்!

பிறப்பு

நாகை நகர தி. மு. கழக செயலாளரும், பொதுக் குழு உறுப்பினரும், கழகஏடுகளின் விற்பனையாளருமான திரு.கே. வீ. இராமன் அவர்களின் துணைவியார் திருமதி சானகி அம்மையார் 11—6—63 செவ்வாய் இரவு ஓர் பெண் மகவை ஈன்றெடுத்தார். தாயும் சேயும் நலம்.

அவரும் கூறுகிருர்

ஆங்கிலத்தை ஒழித்துவிட்டு இந்தியை இந்தியாவின் ஆட்சி மொழியாகப் புகுத்துவதனுல் நாட்டிற்குப் பெரும் ஆபத்து ஏற்படும் என்று பல அறிஞர்களும், தலைவர்களும் எச்சரிக்கை செய்து வருகின்றனர். இந்தியைப் புகுத்தி ஆங்கிலத்தை ஒழிப்பது துன்பத்தை வலுவில் அழைப்பதாகும் என்றி உத்தரப் பிரதேச முன்னுள் கவர்னரும், முக்கியக் காங்கிரசுத் தலைவர்களில் ஒருவரான திரு. கே. எம் முன்சி சூரத் சுழற்குழுக் கூட்டத்தில் பேசுகையில் கூறியுள்ளார்.

"இந்தியா முழுவதிலும் ஆங்கிலம் பெற்றிருக்கும் நிலையை எய்தும் அளவுக்கு மற்ருெரு மொழி வளர்ச்சி அடையும் வரை ஆங்கிலத்தைப் புறக்கணிக்கக்கூடாது. விரைவில் ஆங்கிலத்தை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று எண்ணுவது தீங்காகும். ஆங்கிலத்தைப் பேசுவதாலும், கற்பதாலும் நமது தேசிய உணர்ச்சி கெட்டுவிடும் என்று தாழ்வான மனப்பான்மையை வளர்த்துவிட்டோம். ஆங்கிலத்தைப் புறக்கணித்ததன் காரணமாகக் கல்வியின் தரம் குறைந்துவிட்டது. அவசரப்பட்டு ஆங்கிலத்தை நீக்க முயலுவதால் குறுகிய மனப்பான்மையும் மொழி வெறியும் ஏற்பட வழி உண்டாகும்." என்று திரு.முன்சி தமது உரையில் கூறியுள்ளார்.

இவர் தெரிவித்துள்ள கருத்து மிகவும் கவனிக்கத்தக்கதாகும். இந்தி மொழியை விரும்புபவர்களில் திரு. முன்சியும் ஒருவர் என்பது யாவரும் அறிந்ததேயாகும். அப்படிப்பட்ட ஒருவரே ஆங்கிலத்தை நீக்கிவிட்டு இந்தியைப் புகுத்தக்கூடாது என்று எச்சரிக்கை செய்தால் அதைப் பற்றி வட நாட்டினரும், குறிப்பாக இந்தியை ஆட்சி மொழியாக ஆக்குவதில் தீவிரமாக இருப்பவர்களும் சிந்திப்பது அவசியமாகும்.

—தமிழ்நாடு.

பொன் மொழிகள்

பணம் மிகவும் பலம்படைத்ததோர் வியாதி. ஒருவன் பெற்றதும் முற்றிலும் மாறி விடுகிருன்.

ஒரு பெரிய புத்தகத்தை அவசரமாகப் படித்து முடிப்பதை விட, ஒரே பக்கத்தை நன்ருகப்படித்து அறிவு பெறுவது மேலானது.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ வேண்டிய நாடாகத் தானிருந்தது. ஆனால், இப்போது அந்நிலையைத் தாண்டி தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளக் கூடிய நிலையில் வளர்ந்து விட்டது. பிரான்ஸ் பஞ்சக் காடு, ஒருகாலத்தில். இப்போது, ஐரோப்பாவுக்கே உணவுத் தான்யங்களை அனுப்புவேன் என்கிறது. இரஷ்யாவில் இன்னும் 50 சதவிகிதத்தினர் விவசாயிகள்தான்! பட்டினியும் துயரமும் அலைமோதிய அந்த மண்ணில் வயிறுர உண்டு மகிழ்கிறார்கள், மக்கள். அமெரிக்காதான் உலகத்திலேயே அதிகமாக உணவுற்பத்தியைச் செய்யும் நாடு! கப்பல்களில், ஏற்றியேற்றி, வெளி நாடுகளுக்கு உணவுப் பொருள்களை இன்று அனுப்பி வைக்கிறது. இவைகள் எல்லாம் எப்படித் தங்கள் பிரச்சினையைச் சமாளித்தன—வளர்ந்தன—என்று இந்தியா போன்ற நாடுகள் பரிசீலிக்க வேண்டும். இங்கே இன்னும் முப்பாட்டன் காலத்திய ஏரும் கலப்பையும் உள்ளதே ஒழிய, முத்தனும் முனியனும் எங்கே புது வழிகளில் முயற்சிக்கிறார்கள்? அப்படி முயற்சிக்கத்தான் நிலம் அவனுடையதாகவாயிருக்கிறது?

பெரிய சிக்கல்

நிலச் சுவான்தார் முறையிலுள்ளகேடுபாடுகள்ஒரு பெரிய முட்டுக்கட்டை எனலாம். பட்டிணத்தில் மிராசுதார் உட்கார்ந்து சுகம் அனுபவிக்கும் போது பாடுபடும் விவசாயிக்கு உற்சாகம் எப்படிப் பிறக்கும்? பிரான்சு நாட்டு அறிஞர் ரெனே டூமான் சொல்கிறார், "உலகத்தில் பசியிருக்கக் காரணமே பெரிய பெரிய நிலச்சுவான்தார்கள் இருப்பதும், ஆபிரிகா இந்தியா போன்ற நாடுகளில் விசித்திரமான சாதிப்பாகுபாடுகள் விளங்குவதும், இதன் காரணமாகப் பேதங்கள் ஒழிந்து உழைக்க வேண்டுமென்கிற உற்சாகம் குன்றுவதும் தான்" என்பதாக. இந்தச் சிக்கலை ஒழிப்பதற்குச் சகலஅரசுகளும் முயற்சிக்கின்றன! இங்கே கூட நிலச் சீர்திருத்தங்கள்கொண்டு வரப்பட்டன. அடியோடு மாற்றியமைக்காமல், அதைச் செய்தேன், இதைச் செய்தேன் என்பதால் என்ன பலன் கிடைக்க முடியும்?

பழைமையிலும் பாகுபாடுகளிலும் ஊறிப் போன ஒரு இந்திய விவசாயியால் புதிய முறைகளை ஏற்க முடியவில்லை. இரண்டாவது, விஞ்ஞான முறைகளுக்கு ஏராளமான பணம் தேவைப்படுகிறது!

பத்தாண்டுகளில் உலகிலுள்ள நிலத்துக் கெல்லாம் எருபோட மட்டும் 1000 கோடி ரூபாய் செலவாகும் என்கிறார்கள். வானவெளிக்குமனிதனைஅனுப்புவதிலும், விசித்திர விசித்திரமான ஆயுதங்களைக் குவிப்பதிலும் கோடிக்கணக்கானரூபாய்களைச் செலவழிக்கும் அரசாங்கங்கள் இந்தச் செலவுக்கு எங்கேபோகும்?

ஓராண்டுக்கு மட்டும் இராணுவத்துக்கும் ஆயுத தளவாடங்களுக்கும் உலகத்தில் 1200 கோடி டாலர்கள் அதாவது 5700 கோடி ரூபாய்கள் செலவழிகின்றன! ஒரு மனிதனை வானவெளிக்கு அனுப்பும் ஆராய்ச்சிக்காக அமெரிக்கா 900 கோடி ரூபாய் செலவழிக்கிறது! இப்படிச் செலவழிக்கும் அரசுகள் எல்லாம் சேர்ந்து உணவுற்பத்திக்காகச் செலவு செய்தால்? இந்தியா இராணுவத்திற்காக 1200 கோடிஅழிக்கிறது! சண்டையும் இராணுவமும் கூடாதென்று எல்லாநாடுகளும் முடிவு செய்து, இந்தப் பணத்தையெல்லாம் பட்டினியைப் ஒழிக்கப் பயன் படுத்தினால்? நினைக்க இனிப்பாயிருக்கிறது; ஆனால் நடக்க வேண்டுமே!!

அமெரிக்காவிலுள்ளவாஷிங்டனில் இப்போதுநடைபெறும் உலக உணவு மாநாட்டில் புகழ் பெற்ற ஸ்வீடன் பொருளாதார நிபுணர், உலகத்தில் பட்டினி நிலவக் காரணம் என்ன, பணக்காரர்கள் மட்டுமல்ல ஏழை நாடுகளும்தான் என்று குறிப்பிட்டுவிட்டுக்கூறுகிறார்,

"வளர்ச்சியுறாத நாடுகளிலிருக்கும் அரசுகள் நிர்வாகத் திறனற்று இலஞ்ச ஊழல் பெருகி பணக்காரர்களுக்கு ஆளாகி திண்டாடுகின்றன",

—என்கிறார்! நிச்சயமாக, இந்தியாவில் நடக்கும் காங்கிர சாட்சியை நினைத்தால் இது உண்மையென்போம்! இது மாள அடிப்படையான அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டாலொழிய பஞ்சமும் பட்டினியும் தமிழ்நாடு போன்ற பின் தங்கிய பிரதேசங்களில் ஒழிவது சாத்தியமில்லை. தினம்பதினாயிரம் சாவுக்கு நாமும் நமது காணிக்கையை வழங்கிக் கொண்டுதான் இருப்போம்!!

கலாட்டா காமராசர்!!

"பேஷ்! அண்ணாச்சி பகுபேஷ்!"

"என்னுங்கிறேன், எதுக்குப் பேஷ் போடுறீகங்கிறேன்."

"தி. மு. க., லீக், சுதந்திரா மூணும் கூடிக்கிறானுக... ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்றாக......ன்னு பேசினீங்களாமே, திருவண்ணாமலையில்............"

"ஆமாங்கிறேன்! அப்படித்தான் பேசினேங்கிறேன்......"

"ஆமா! காங்கிரசோடு, கழகம், கம்மூனிட்டு,சம்பத் எல்லோரும்மே சர்த்துக்கிட்டுத்தானே தி. மு. க. வை எதிர்க்கிறீங்க? தி. மு. க. கூட்டு எப்படி உருப்படும்னு நீங்க, கூட்டு சேரலாமா இந்தக் கட்சிகளோடே' இது அரசியல் நாணயமாகுமா........."

"எலக்ஷனுக்காக எல்லாம் செல்யலாங்கிறேன்...... ஆமாங்கிறேன்"

"அப்போ! தி. மு. க. மட்டும் கூட்டுச் சேர்ந்தா என்னவாம்?"

"அவன்க ஜெயிச்சுடுவான்கங்கிறேன் எலெக்ஷன்லே! அதுக்காக ஜனங்க மனசை மாத்த இப்படிப் பேசறேங்கிறேன்......"

"ஜனங்க, உங்களுக்கு ஒரு நாக்கா—இரண்டு நாக்கான்னுல்லே கேட்கிறாங்கங்கிறேன்......"

"அவுங்க கேட்டுட்டுப் போகட்டும்கிறேன்! எனக்கு எலெக்ஷன்தான் முக்கியம்கிறேன்........."

இல்லற வாழ்க்கையில் பலஹீனமா?

வாலிபப் பருவத்திலே வயோதிகத் தன்மையா?

உடலில்பலக்குறைவு சக்தி குறைவா?

அப்படி இருந்தால் நீங்கள் இனி கவலைப்படத் தேவையில்லை.

பிரபல சித்த வைத்தியர்

டாக்டர் எஸ். ஆர். சிவராஜ்

அவர்களின் தயாரிப்புகளான

'சிவராஜ்' ராஜாமிர்தம் (காலை, மாலை உள்ளுக்கு)
சிவராஜ்' ராஜ்பில்ஸ் (காலை, மாலை உள்ளுக்கு)
'சிவராஜ்' தாமரைத் தைலம் (ஸ்நானத்திற்கு)
சிவராஜ்' லேபனத்தைலம் (மேல்பூச்சு)

இவைகளைத் தொடர்ந்து சாப்பிட்டு இழந்து போன சக்தியை மீண்டும் பெற்று வாழ்க்கையில் புத்துணர்ச்சி பெறலாம்.

1 மாதம் உபயோகிக்கும் மருந்துகள்
4-ம் சேர்ந்தது ரூ. 23-00
(தபால் செலவு ரூ. 2-50 தனி)

விபரங்களுக்கு தொடர்பு கொள்க:

சிவராஜ் சித்த ஆயுர்வேத வைத்தியசாலை

சிவதாபுரம் அஞ்சல் : : சேலம்-2

பதிவு எண்: எம். 7466

அறப்போர்

21—6—63

இலங்கையில் செய்தித்தாளாகப் பதிவு செய்யப்பட்டது.

கேள்வி பதில்

கே: ''நாட்டுப் பிரிவினையைக் கைவிட்டு விடுவாரானல் அண்ணுதுரைக்கு என் கையாலேயே மாலை போடுவேன்'' என்று ம. பொ. சி. யும், பிரிவினையைக் கைவிட்டு வெளிப் படையாக அண்ணுதுரை வந்தால் நான் வரவேற்பேன்'', என்று சம்பத்தும் பேசுகின்ருர்களே! என்ன பொருள்?

—சுந்திரமூர்த்தி

விவேகானந்தபுரம்

ப: கனவிலும் நனவிலும் 'நாம்' இருக்கின்ரேம் என்பதுதான் சுருக்கமான பொருள்! நாட்டுப்பற்றுள்ள இந்த வீரர்கள், நுழைகின்ற இந்தியை எதிர்க்க என்ன பேச வேண்டுமோ அதை விட்டு ஏன் நம்மையே அலச வேண்டும்? ஆராய வேண்டும்? கழகம்மேற்கொள்ளும் முடிவுகள் தங்களை அரசியல் வானிலிருந்தே அகற்றி விடுமோ என்கிற அச்சம் இந்த 'இரு பெருந் தலைவர்'களுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

0 0 0

கே: இந்தியஅரசியல் திருத்தச் சட்டம் பற்றியும் அதனுல் கழகத்துக்கு ஏற்படும் ஆபத்துக்களைப் பற்றியும் ஆராயப் பொதுக்குழு அமைத்துள்ள கமிட்டியில் நீங்கள் இருக்கிறீர்களாமே? என்ன செய்யப் போகிறீர்கள்?

—கே. பி. ஆதிமூலம்

அச்ச நல்லூர்

ப: காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வெல்லக் கூடியது தி. மு. க. என்பதை உறுதிப் படுத்தும் வகையில் மேற்படி கமிட்டிகள் முடிவுகள் எடுக்கும்.

0 0 0

கே: திருவண்ணுமலைநிலவரம் எப்படியண்ணு இருக்கிறது?

—தீரன்

கலசப்பாக்கம்

ப: தமிழகத்தில் 'தேர்தலை' எப்படிச் சமாளிப்பது என்பதில் கண்ணுங் கருத்துங் கொண்ட ஒரு சர்க்காரை நாம் பெற்றிருக்கிரேம். தேர்தல்களில் காங்கிரஸ் வெல்ல வேண்டுமென்ருல் எதையும் செய்யலாம் என்கிற 'மதம்' கொண்டவர் மாநிலத் தலைமை அமைச்சராயிருக்கிருர். அவர் வசமே பஸ் இலாகாவும், போலீஸ் இலாகாவும், பஞ்சாயத்து யூனியனும் இருக்கிறது. திருவண்ணுமலைத் தொகுதியில் பல கிராமங்களில் அவர் 'படை'யெடுப்பு நடந்திருக்கிறது! பணநாதமும் நிறையக் கேட்பதாகச் சொல்லப் படுகிறது,இருந்தாலும் கழகமும் ப. உ, ச. வும் உழைப்பையும் தொண்டினையும் காட்டிப் பாடுபடுகின்றனர். தேர்தலன்று நாம் விழிப்போடு இருக்க வேண்டும். வெளியூர் காங்கிரஸ் வீரர்கள் 'எதற்கும்' தயாராகச் செல்கிருர்களாம். இந்தச் சக்திகளையெல்லாம் எதிர்த்து முறியடிக்க வேண்டிய நிலையில், ஏழைக் கட்சியான நாம் இருககின்ரேம்.

° ° °

கே: இந்தி எதிர்ப்பு இயக்கம் எப்படியிருக்கும்?

—சோலை

மன்னை

ப: கருணுநிதியைத் தலைவராகக் கொண்டு துவங்குவது ......எப்படியிருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா?

° ° °

கே: எனக்கும் என் மனைவிக்கும் சதா சண்டையாகவேயிருக்கிறது. இதைத் தவிர்க்க என்னண்ணு செய்யலாம்......?

—வீரப்பெருமாள்

....

ப: உங்கள் மனைவிக் கோபிக்கும்பொழுது செவிடனுகி விடுங்கள்! அவர் செய்த தவறைச் சொல்ல விரும்பும் போது ஊமையாகி விடுங்கள்! இப்படியே கொஞ்ச நாளிருந்தால் எல்லாம் சரியாகி விடும். இதே போதனையை உங்கள் மனைவிக்கும் சொல்லுங்கள்...........அப்படிச் சொல்ல ஆரபித்தாலே சண்டை வருமென்ருல் என் பதிலை அவருக்குக் காட்டுங்கள்.........

0 0 0

கே: சீன யுத்தம் வலுக்குமென்று எண்ணுகிறீர்களா?

—சீமா

ஏனங்குடி

ப: அப்படித் தெரியவில்லை!

காம்ரேட் கழுகாசலம்!

''சக்சஸ்! வெற்றி! :தி. மு. க வை மூக்குடையச் செய்தோம்...''

''எங்கே காம்ரேட்! எங்கே...?''

''நாங்குனேரியில்! போடிநாய்க்கனூரில்! நாங்கள் ஆதரித்த காங்கிரஸ் வென்றது. தி. மு.க. ஆதரித்த சுதந்திராவும் சுயேச்சையும் தோற்ருர்கள்.''

''அது சரி! அந்த வெற்றிக்கு நீ காரணமா? திராவிட கழகமா? தமிழ் தேசீயமா? இல்லை, காங்கிரசா...'

''வெற்றியில் எமக்கும் பங்குண்டு. அதனுல் நாங்களும் வெற்றி விழாக் கொண்டாடுவோம்!''

''கொண்டாடுங்கள். வெற்றி விழாக் கொண்டாடும் உனது கம்யூனிஸ்டுக் கட்சி, டில்லி பார்லிமெண்டு கூடும் போது வரி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப் போகிறதாமே. தெரியுமா?''

''ஆமாம்! பொதுமக்களைப் பாதிக்கும்படியான வரிகளைப் போட்டிருக்கிற சர்க்காரை யார்தான் கண்டிக்காமலிருப்பார்கள்? நாங்கள் மக்களுக்காகச் சேவை செய்கிறவர்கள். அதனுல், மக்களின் அதிருப்தியை எடுத்துக் காட்டுவதற்காகப் பிரம்மாண்டமான ஆர்ப்பாட்டத்தை நடத்தப் போகிரேம்...''

''மக்களைப் பாதிக்கும் வரிகளை காங்கிரஸ் சர்க்கார் தானே போட்டது?''

''...இருந்தாலும் நாங்கள் மாநில சர்க்காரைத் தான் ஆதரிக்கிரேம்.''

''அதாவது, காமராசர் சர்க்காரை! அவருடைய அரசாங்கம் மட்டும் வரி போடவில்லை என்கிருயா? போன ஆண்டை விட இந்த ஆண்டு 12 கோடி ரூபாய் அதிக வரி கொடுக்கிறதே நாடு, தெரியுமோ?''

''அதென்னமோ! நாங்கள் காங்கிரசைத்தான் ஆதரிப்போம்...''

''காஞ்சியில் அண்ணுவைத் தோற்கடிக்கத் துரோகத்தனம் செய்த உன் கட்சியின் வண்டவாளம் எங்களுக்குத் தெரியும். உனக்கு ஏது கொள்கை? நிரந்தரமான புத்தி? எரியும் விளக்கில் போய் ஒட்டிக்கொண்டு என்னுல்தான் இந்த விளக்குக்கு வெளிச்சம் என்று சொல்லும் மின்மினிகளைப் போல நீயும், தி. க. வும், தேசியமும் போய் ஒட்டிக்கொள்கிறீர்கள், காங்கிரசோடு! யோக்கியதை யிருந்தால், வரி வாங்கும் ஆட்சியை டில்லியிலே போய் கண்டிக்கும் நீ இங்கேயும் கண்டிக்க வேண்டுமல்லவா? நீயும் ஒரு தோழனு!!''

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 9-ஏ, சர். சி.பி. ராமசாமி ரோடு, அபிராமபுரம், சென்னை-18.
அச்சிட்டோர் : எம். பி. சத்தியமூர்த்தி, முல்லை அச்சகம், 3-40, மவுண்ட் ரோடு, சென்னை-6